பக்கங்கள்: 12+IV=பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 08 செவ்வாய்க்கிழமை (22-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:210



நேற்று மட்டக்களப்பில் செய்தியாளர்களைச் சந்தித்த நிலாவினி, தீந்தமிழ், லாவண்யா, பிரேமினி.

## தேசிய துணைப்படைக்கு காவல்துறை ஆள்சேர்ப்பு

கிளிநொச்சி,ஜூன்22

தமிழீழ தேசிய துணைப்படை ஒன்றை தமிழீழ காவல்துறை உருவாக்கவிருக்கின்றது. இதற்காக ஆளகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்தப்படையில் இணைய விரும்புபவர்கள் நாளைமுதல் எதிர்வரும் 30ஆம் திகதிவரை கிளிநொச்சியில் உள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்துக்கு வருமாறு காவல்துறையின் ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

18 வயதுக்கும் 25வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலரும் இந்தப் படையில் இணைந்து பணியாற்றலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நல்ல தேகாரோக்கியமுள்ளவர்கள் தேசியப்படையில் இணைய

(12ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவப் புலனாய்வுப் பிரிவே கருணாவுக்கு முழுப் பாதுகாப்பு!

## ஐ.தே.கட்சி எம்.பியே அக்குழுவைக் காப்பாற்றி தலைநகர் கொழும்புக்குக் கூட்டிச் சென்றார்

மட்டக்களப்பு,ஜூன்22

**கிழக்கு மாகாணத்திலிருந்து தப்பியோடிய புலிகளின் முன்னாள் தளபதி கருணாவுக்கு இலங்கை இராணுவமே முழுப் பாதுகாப்புக் கொடுத்து அவரை வைத்திருக்கிறது.**

**- இவ்வாறு அடித்துக் கூறியிருக்கிறார் கடந்த வாரம்வரை கருணாவுடன் கூடவிருந்த அவரின் உதவியாளர்களுள் ஒருவரான நிலாவினி.**

**ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான அலி ஸாஹிர் மௌலானாவே கிழக்கு மாகாணத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொழும்புக்குக் கூட்டிச்சென்றார் என்றும் அவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.**

கருணாவுடன் சென்ற பெண் தளபதிகளில் ஒருவரான நிலாவினி நேற்று மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவருடன் முன்னாள் தளபதிகளான தீந்தமிழ், லாவண்யா, பிரேமினி ஆகியோரும் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ரமணன், நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் பாபா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் மாநாட்டில் மேற்படி நான்கு பெண்களும் தெரிவித்ததாவது:-

கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு, கொழும்பு வீதியால் சென்று கொண்டிருந்தபோது நாலாம் புதுச் சந்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானா பொலீஸாருடன் வந்து எம்மை வான் ஒன்றில் ஏற்றிச் சென்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா தப்பிச்செல்ல உதவியதை ஒப்புக்கொள்கின்றார் அலிஸாஹிர்!

கொழும்பு,ஜூன்22

மட்டக்களப்பிலிருந்து கருணா தப்பிச் செல்வதற்கு தான் உதவினார். என்பதை அலிஸாஹிர் மௌலான எம்.பி. ஒப்புக்கொண்டுள்ளார்.

கருணாவும் தாங்களும் தப்பிச் செல்வதற்கு அலிஸாஹிர் எம்.பியே நேரில் வந்து தமக்கு மீண்டும் உதவினார் என்று விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டுள்ள முன்னாள் தளபதி நிலாவினி நேற்றுத் தெரிவித்திருந்தார்.

அதன்பின்னரே கருணா தப்பிச் செல்வதற்கு தான் உதவினார் என்பதை அலிஸாஹிர் எம்பி ஒப்புக்கொண்டுள்ளார். மனிதாபிமான அடிப்படையிலே கருணாவுக்குத் தான் உதவி

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் நாளை புதன்கிழமை தொடக்கம் பிரதி புதன்கிழமைதோறும் உதயனில் வெளியாகவுள்ளன.

முன்னணி ஆசிரியரால் தயாரிக்கப்படவுள்ள இந்த வினாத்தாள்களைத் தொகையாகப் பெற்றுக் கொள்ளவிரும்பும் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் 'உதயன்' விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு வினாத்தாள்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பலாலி விமான நிலையம் திருத்தம்:

## இந்திய உதவியைக் கைவிட இலங்கை விமானப்படை முடிவு

கொழும்பு,ஜூன்22

பலாலி விமான நிலையத்தை இந்திய உதவியுடன் சீரமைக்கும் திட்டத்தை விமானப்படை கைவிட்டுள்ளதாக விமானப்படைக் கட்டளைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார். இன்னும் குறைந்த செலவில் விமான நிலையத்தைத் திருத்த முடியும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் இந்தியா சம்பந்தப்பட்டிருப்பதால் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகக் கூறிய அவர் சில மாதங்களுக்கு முன்னரே திருத்த வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று தாங்கள் எதிர்பார்த்த போதிலும் அது கைகூடவில்லையென்றும் கூறினார்.

விமான நிலையத் திருத்தத்தில் ஏற்பட்டு வரும் தாமதத்தை பிரதமரும் நெடுந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சருமான மகிந்த ராஜ பக்ஷவிடம் எடுத்துக்கூறியதாகவும் இனிமேலும் தாமதிக்காமல் திருத்த வேலைகளுக்கான செலவுகளை அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டு வேலைகளைத் தொடங்க வேண்டுமெனத் தாம

(12ஆம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றப் பயங்கரவாதத்தை ஆட்சேபித்து

## 114 எம்.பிக்கள் கையெழுத்திட்டு நேற்று சபாநாயகருக்கு மகஜர்!

கொழும்பு,ஜூன்22

அரசுத் தரப்பினர் நாடாளுமன்றத்தில் புரிந்துவரும் பயங்கரவாதச் செயல்கள் மற்றும் அராஜகங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 114 எம்பிக்கள் ஒப்பமிட்ட மகஜர் ஒன்று நேற்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

புதிதாக எம்.பிக்களாக நியமிக்கப்பட்டு இன்னும் சத்தியப்பிரமாணம செய்யாமல் இருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் இருவர், சத்தியப்பிரமாணம் செய்ததும் இந்த மகஜரில் ஒப்பமிடுவர் என்றும் அவர்களுடன் சேர்ந்து மகஜரில் ஒப்பமிட்ட எம்.பிக்களின் எண்ணிக்கை 116ஆக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் சபாநாயகரைத் தவிர்ந்த 224 எம்.பிக்களில் 116பேர் எதிர்க்கட்சிப் பக்கம் ஒன்று சேர்ந்திருப்பதன் மூலம் இந்த அரசு 108 இற்குக் குறைவான உறுப்பினர்களின் ஆதரவை மட்டும் கொண்ட சிறுபான்மை அரசு என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியலில் எம்பியான இருவர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ததை அடுத்து அவர்களின் இடத்துக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் இன்னும் நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை. அதனால், அவர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட மகஜரில் ஒப்பமிடவில்லை. தமது பதவிகளை ஏற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் அதில் ஒப்பமிடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகரிடம் மகஜர் கையளிக்கும் நிகழ்வில் ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, முன்னாள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'ஐ.நா.பொதுச்சபைக்குள்' இலங்கைப் பிரதிநிதி விடுதலைப் புலிகளின் சீருடையில் பிரவேசம்

### ஆட்சேபத்தை நிராகரித்து அதை அனுமதித்தார் தலைவர்

ஒக்லண்ட்,ஜூன்22

ஐ.நா.சபைக்குள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவொன்று நுழைந்து ஸ்ரீலங்காவுக்குரிய பகுதியில் அமர்ந்து கொண்டது. குழுவினர் விடுதலைப் புலிப்போராளிகள் அணியும் சீருடையில் புலிகளின் தேசியக் கொடியுடன் வந்திருந்தனர்.

சபையின் ஒரு பகுதியில் இருந்து எதிர்ப்பொலி கேட்டது. ஸ்ரீலங்காவை விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவம செய்யமுடியாது என்று அவர்கள் குரல் எழுப்பினார்கள். ஆனால், சபைத தலைவரும் ஏனைய உறுப்பு நாடுகளும் எதிர்ப்பை நிராகரித்து சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

இது உண்மையில் நடந்த சம்பவமா என்று வாசகர்கள் கேட்பதற்கு முன் அதை நாமே சொல்லி விடுகின்றோம். சம்பவம் நடந்தது என்னவோ உண்மைதான். ஆனால், அது உண்மையான ஐநா. சபையில் அன்று, நியூஸிலாந்தில் ஒக்லன்ட் பிராந்தியத்தில் கல்லூரி மாணவர்களுக்காக நடைபெற்ற மாதிரி ஐ.நா.சபையில்.

விவரம் பின்வருமாறு:-

ஐ.நா.சபையின் செயற்பாடுகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடிப் பகுதி வீட்டில் பெருமளவு கஞ்சா மீட்பு!

### ஏ-9 ஊடாகக் கடத்தி வரப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்22

யாழ் கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் பெருந்தொகையான கஞ்சா யாழ். பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் திடீர் சோதனை நடத்திய பொலீஸார் கஞ்சாவைக் கைப்பற்றினர். அந்த வீட்டின் உரிமையாளரான பெண்ணையும் கைதுசெய்தனர்.

பிரஸ்தாப பெண் விசாரணையின் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

குறிப்பிட்ட வீட்டின் மேல்தளத்தில தங்கியிருக்கும் நபருடன் குறிப்பிட்ட பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பொலீஸார் கேட்டிருந்தனர்.

இதன்படி பிரஸ்தாப பெண் தனது வீட்டில் தங்கியிருக்கும் பக்கீர் முக

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பனிச்சங்கேணி வாசி மீது கடும் சித்திரவதை!

## சிறைச்சாலையிலிருந்து மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறையீடு

மட்டக்களப்பு,ஜூன்22

விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பனிச்சங்கேணியைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகுமார் என்பவர் தாம் காரணம் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்றும், கைதுசெய்யப்பட்ட காலத்தில் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்றும் - இது தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு நட வடிக்கை எடுத்துத் தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனவும் - கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சிறையிலிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதம் வருமாறு:-

மேன்மையுடையீர் ஐயா!

மேற்படி முகவரியில் வசிக்கும் சி.சிவகுமார் ஆகிய நான் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக கடந்த 19-05-2004 ஆம் திகதி மட்டக்களப்பு அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்று திரும்பும்போது இராணுவ அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலீஸில் ஒப்படைக்கப்பட்டேன். இதனிடையில் இராணுவ விசேட அதிரடிப் படையாலும் பொலீஸாராலும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானேன். சிகரெட்டால் சுடப்பட்டும் துன்புறுத்தப்பட்டேன்.

நான் எவ்வித குற்றமும் புரியாமல் ஏன் எனக்கு இப்படி ஒரு நிலை வரவேண்டுமென மிகவும் துன்புறுகிறேன். 'நான் ஒரு மனநோயாளி ஆவேன்.' மனநோய் வைத்திய சிகிச்சைக்காகவே 19.05.2004 இல் வைத்தியசாலைக்குப் போயிருந்தேன். இதற்கான சகல ஆதாரமும் என்னிடம் உண்டு.

மேலும் என்னிடமிருந்து எந்தவொரு குற்றவியல் சம்பந்தமான தடயப் பொருள்களோ அல்லது குற்றம் புரிந்ததற்கான எவ்விதமான காரணமோ இன்றி கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளேன். மேற்கொண்டு என்னைக் குற்றச் சந்தேக நபராகக் கருதுவதற்கு என்னைக் கைது செய்தவர்களிடம் எவ்வித ஆதாரமோ அல்லது சாட்சியமோ இருக்க முடியாது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

நான் கடந்த சில காலமாக மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவான 'மக்' நிறுவனத்தில் கைது செய்யப்படும் வரை பயிற்றப்பட்ட பணியாளராகக் கடமை புரிந்து வந்துள்ளேன். என்னைக் கைதுசெய்து மனித நேய மற்ற முறையில் தாக்கப்பட்டதாலும் உடல், உளரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளேன் என பதையும் குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

எனது உழைப்பால் தங்கிவாழும், வறுமையான நிலையிலுள்ள என் குடும்பத்தினர் மிகவும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். என்னை சித்திரவதை செய்ததற்கான மருத்துவ அறிக்கையும் நான் ஒரு மனநோயாளி என்பதனை நிரூபிக்கும் வைத்திய ஆதார சான்றிதழ்களும் என்னிடமுண்டு.

எனவே, எனது துன்பகரமான நிலையைக் கருத்தில்கொண்டு எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பூர்வாங்க விசாரணை ஒன்றை மேற்கொள்ளவும்.

I) எனது விடுதலைக்கு உதவுங்கள்.

II) எனக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கை மீளப்பெற ஆவன செய்யுங்கள்.

III) என்னைக் கைது செய்து சித்திரவதை செய்தவர்களுக்கு எதிராக சர்வதேச மனித உரிமைகள் ஆணையத்தின் சட்ட வாக்குக்கு அமைவாக சட்ட நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு நிறைவான நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன் - என்று உள்ளது.

(எ-3)

# சுகாதார ஊழியர் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி அரச சுகாதார ஊழியர்கள் இன்று ஒரு நாள் அடையாள சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அரச மருத்துவ அதிகாரிகள், தாதியர்கள் தவிர்ந்த ஏனைய சகல ஊழியர்களும் இப்போராட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

இதேவேளை - சுகாதாரத்துறை ஊழியர்கள் நண்பகல் 12 மணிக்கு சுகாதார அமைச்சின் பணிமனை முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தொழிற்சங்க ஒன்றியத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-15)

# ஊழியர் போராட்டத்துக்கு முடிவு காண துணைவேந்தருடன் ஆசிரியர் சங்கம் பேச்சு

யாழ்ப்பாணம்,ஜூன்22

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஊழியர் சங்கம் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஈடுபட்டுள்ளது.

ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று நேற்றுப் பல்கலைக்கழக ஆசிரியர் பொது அறையில் இடம் பெற்றது.

அங்கு எடுக்கப்பட்ட முடிவின்படி வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் துணைவேந்தருடன் இன்று பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

* கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தை எதிர்ப்பதில்லை. அவர்களுக்கு ஆதரவாக நின்று செயற்படுவது.
* ஊழியர் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் ஒளிவு மறைவின்றிப் பதில் அளிக்கவேண்டும்.
* போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை வேலையில் இருந்து நிறுத்தியதைக் கண்டிப்பது.
* இடர்காலக் கொடுப்பனவு சகலருக்கும் வழங்கப்படவேண்டும்.
* மாணவர்களின் கல்வி சுமுகமாக முன்னெடுக்கப்படுவதற்கு போராட்டக்காரர் ஆதரவு வழங்குவதைப் பாராட்டுதல்.
* போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் பணிகளை தற்சமயம் ஆசிரியர்களே மேற்கொள்கின்றார்கள். அதனை இனிமேல் நிறுத்துதல்.

இதேவேளை -

நேற்றைய தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தை மூடி மறியல் செய்தனர். இதனால் பதிவாளர் தனது நாளாந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாதவாறு தடுக்கப்பட்டார்.

தமது கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் உடனடித் தீர்வு எதனையும் வழங்காதவிடத்து தமது போராட்டம் சகல பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை -

யாழ்.பல்கலைக்கழகத்தில் நிர்வாகத்துக்கும் ஊழியர் சங்கத்துக்கும் இடையே நீடித்துவரும் இணக்கமின்மை காரணமாகப் பல்கலைக்கழக செயற்பாடுகள் அடிக்கடி ஸ்தம்பித மடைவதனை ஆட்சேபித்து அதற்கு முடிவு கட்டும் நோக்குடன் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

(ஐ-3-5)

# புறா இறந்து விழுந்த சம்பவம்: சதிவேலை எதுவும் இல்லை!

அண்மையில் குக்குலேகங்க இராணுவப்பயிற்சி முகாமில் இடம்பெற்ற வைபவமொன்றில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பறக்கவிட்ட புறா இறந்து விழுந்த சம்பவத்தில் சதி வேலை எதுவுமில்லையென்று அது பற்றி விசாரணை நடத்திய குழு தெரிவித்துள்ளது.

அதிகளவு வெப்பத்தினால் அப்புறா இறந்திருப்பதாகத் தெரிவித்துள்ள விசாரணையாளர்கள், பிரதி அமைச்சரை ஏற்றிவந்த ஹெலிக்கொபடர் குறித்த நேரத்துக்கு 20 நிமிடம் பிந்தியே வந்திறங்கியதாகவும், அதற்கு முன் சுமார் 50 நிமிடங்கள் புறாக்களை படையினர் தம் கைகளில் வைத்திருந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதியமைச்சரை சிறுமைப்படுத்தும் நோக்கம் எவருக்கும் இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

(ப)

# போதையில் மோ.சைக்கிளை செலுத்தி காரோடு மோதிய பல்கலை. மாணவர்!

## நீதிமன்றில் 6 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைக் கண்மூடித்தனமாகச் செலுத்திக் கார் ஒன்றை மோதிச் சேதம் விளைவித்தார் எனத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் அந்த மாணவனுக்கு நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்திருக்கின்றது.

கடந்த 17 ஆம் திகதி பலாலி வீதியில் சென்று கொண்டிருந்த கார் ஒன்றை மோட்டார் சைக்கிளால் மோதிச் சேதம் விளைவித்தமை மற்றும் விபத்தைத் தடுக்க முயற்சிக்காமல் மதுபோதையில் கவனயீனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் அந்த மாணவருக்கு எதிராகப் பொலீஸார் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா குறிப்பிட்ட மாணவரை கடுமையாக எச்சரிக்கை செய்தார்.

'யாழ். பல்கலைக்கழகம் மக்களுக்காக நல்ல பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றது. அத்தகைய பணிகளைக் கறைபடியச் செய்யும் செயல்களில் ஒருசிலர் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது' என்று நீதிவான் தெரிவித்தார். பிரஸ்தாப மாணவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு 4 ஆயிரம் ரூபா வழங்கும்படியும் -

கார் உரிமையாளருக்கு நஷ்ட ஈடாக 10 ஆயிரம் ரூபா வழங்கும்படியும் - உத்தரவிட்டார்.

(ஐ-3)

# மனித உரிமை பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்22

சமூக மட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர் செயற்றிட்ட பிரிவினரால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் இறப்பு மற்றும் பிறப்புத் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகள், அடையாள அட்டைகள் மற்றும் வாக்காளர் இடாப்பின் பிரதிகள் என்பனவற்றைப் பெறுவதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அத்துறை சார்ந்த அதிகாரிகளால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இடம்பெயர் செயற்றிட்ட அதிகாரி செல்வி வல்லிபுரம் வேளினி தெரிவித்துள்ளார்.

(ஒ-5)

## முஸ்லிம் சமூகத்தை துரோகக்கும்பல் மூலம் சிதைப்பது போல

# கருணாவைப் பயன்படுத்தி புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தும் அரசின் முயற்சி பயன் தராது

## மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் சாட்டை

கொழும்பு,ஜூன்22

"கருணாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்ய அரசாங்கம் மேற்கொள்ளும் சதிச்செயலகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டிக்கிறது.

"முஸ்லிம் சமூகத்தை சில துரோகக்கும்பல்கள் சிதைக்க முயற்சிப்பது போல புலிகள் இயக்கத்தை சிதைத்து விடமுடியாது"

- இப்படிக் கூறினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

"அரசாங்கத்தின் கெடுபிடிகளும், குறுக்குப் பாதைப் பயணமும் நாட்டு மக்களை ஒரு யுத்த பீதிக்கே கொண்டு செல்லுகின்றன.

"வாழ்க்கைச் செலவு உயர்வினால் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் நாட்டு மக்களை, மீண்டும் ஒரு யுத்தம் வெடித்து விடுமோ என அச்சுறுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது" என்று அவர் குற்றம் சுமத்தினார்.

நேற்றுக்காலை மேல் மாகாணத்தில் போட்டியிடும் ஸ்ரீல.மு.கா.வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசுகையில் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார். ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:-

"இன்றைய அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதாகப் பம்மாத்துக்காட்டுகிறது.

"பெரும்பான்மை இல்லாத இந்த அரசாங்கத்தால் ஒருபோதும் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியாது.

"பலம்மிக்க உறுதியான அரசுடனேயே பேச்சுக்கள் நடத்துவோம் என தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாகக் கூறிவிட்டனர்.

"இப்படியான ஒரு நிலையில் கருணாவை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்த அரசு முனைகின்றது. அரச ஊடகங்களையும் அதற்குப் பயன்படுத்துகின்றது.

"அரசாங்கத்தின் இந்த சுத்துமாத்துப் பலிக்காது. பலமிக்கதான ஒரு புலிகள் அமைப்புடனே எதையும் பேச முடியும்.

"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலத்தைப் பெறுவதற்காக அரசாங்கம் ஆள்பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக செயற்படுகிறது. மங்கள சமரவீரவும் சிறிபதி சூரிய ஆராச்சியும் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

"இவர்களுடைய முதல் குறி எங்கள் மீதே இருந்தது. எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி கட்சியைச் சிதைக்க முற்பட்டனர். அது முடியவில்லை. இப்போது பல்வேறு குறுக்கு வழிகளில் செல்கின்றனர். அது அரசாங்கத்திற்கு வெற்றியளிக்காது.

"அரசின் ஜனநாயக விரோத செயல்களைக் கட்டுப்படுத்தவே எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பை உருவாக்கியிருக்கிறோம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசை வீழ்த்தும் எண்ணம் முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடையாது. அதே சமயம், ஐக்கிய தேசியக்கட்சியின் அடிவருடியாகவும் முஸ்லிம் காங்கிரஸ் செயற்படாது.

"எந்தவொரு அரசியல் கட்சிக்கும் கட்டுப்படாது, மிகவும் சுதந்திரமாகவே முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுகிறது. அதன் வெளிப்பாடாகவே மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகிறது.

"வடக்கு - கிழக்குக்கு வெளியேயும் எமது பலத்தையும் தனித்துவத்தையும் நிருபித்துக்காட்டுவதற்காகவே மாகாணசபைத்தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறோம். மேல் மாகாணத்தில் பத்துக்குக் குறையாத ஆசனங்களை முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றும்.

"தேசிய அரசியலில் மட்டுமல்லாது மாகாணமட்டத்திலும் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் திகழும். அதன் மூலம் இரு பிரதான கட்சிகளும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் மதித்து நடக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

"முஸ்லிம்களின் உரிமைகளை முன்நிறுத்தியே அரசுடனோ, எதிர்க்கட்சியுடனோ கூட்டிணைந்து செயற்படுவோம். ஐக்கிய தேசியக் கட்சியுடனான தற்போதைய உறவு அந்த அடிப்படையிலே அமைந்திருக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு தலைமைதத்துவம் கோர ஒருபோதும் முஸ்லிம் காங்கிரஸ் போகமாட்டாது.

"கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் அம்பாறையில் மரச்சின்னத்தில் போட்டியிட்டு, தனது பலத்தை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. நாடாளுமன்றம் செல்வதற்காக ஐ.தே.கவின் யானைச் சின்னத்தை நாடியிருக்க வேண்டிய தேவை எனக்குக் கிடையாது.

"தற்போது மேல்மாகாணத்தின் கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் கேகாலை, இரத்தினபுரி போன்ற இடங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகிறது.

"நாடாளுமன்றத்தை அரசமைப்புச்சபையாக மாற்றும் அரசின் திட்டம் சிறுபான்மையினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் இ.தொ.கா., தமிழரசுக்கட்சி போன்றவற்றுடன் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுக்களை நடத்தியிருக்கிறது.

"சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதை அரசும் புலிகளும் அங்கீகரிக்க வேண்டும். தேர்தல் காலத்தில் தனித்தரப்புப் பற்றி முழங்கிய தற்போதைய முஸ்லிம் அமைச்சர்கள் இன்று மௌனித்துப் போயுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் இது விடயத்தில் என்றுமே உறுதியாக இருந்து வருகிறது.

"தனி ஒரு மனிதரான ஜனாதிபதி தனது அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதிலேயே ஆர்வம் காட்டி வருகிறார். சமாதான முயற்சிகளை அவரால் தொடரமுடியாது. இன்று நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு நாட்டை நிர்வகிக்கமுடியாது தட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கிறது."

இப்படி ரவூப் ஹக்கீம் கூறினார்.

உதயன்

# இணக்கமில்லாத கூட்டு பிணக்கிற்கே வழி

வண்டி ஒன்றை மாடுகள் சேர்ந்து ஒரே பக்கமாக இழுக்காமல் ஆளுக்கு ஒரு பக்கம் நின்றுகொண்டு தாம் விரும்பும் திசைக்கு - ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்க மாக - இழுக்க முயன்றால் என்ன நடக்கும்?

வண்டி நலாபுறமும் மாறி மாறி இழுபட்டு உடைந்து நொறுங்கும்!

இதுதான் நாட்டின் இன்றைய நிலைமை. வண்டில் தான் நாடு. பல்வேறு த்ரப்புகளாகப் பிரிந்து நிற்கும் - அரசுதான் மாடுகள். இந்த இழுபறியில் சிக்கி நாட்டின் எதிர்காலம் என்னவாகப்போகின்றது என்பதே கேள்வி.

ஒன்றுக்கொன்று ஒத்துவரமுடியாத - இணங்கிப் போகமுடியாத - அடிப்படைக் கோட்பாடுகளில் வேறு பட்டு நிற்கின்ற - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் கூட்டமைத்தன. ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற 'வெறி' அவற்றின் கண்ணை மறைத்தது தங்களுக்குள் உள்ள கொள்கை வேறுபாடுகளை உணரவிடாமல் மதியை மயக்கியது.

இரண்டும் கூட்டமைத்தன. எதிர்பார்த்தபடி ஐ.தே. முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பவும் முடிந்தது. தாம் மனப்பால் குடித்தபடி ஆட்சியையும் பிடிப்பது சாத்திய மாயிற்று. ஆனால், ஆட்சியைக் கொண்டு நடத்துவதில் தான் கொள்கைகளும், கோட்பாடுகளும் குறுக்காக வந்து இடித்து நிற்கின்றன. ஒன்றுக்கொன்று முரணான திசையில் இழுபடுவதால் அரசைக் கொண்டு நடத்து வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தள்ளாடுகின்றது அரசு.

நாட்டின் மிகமோசமான பொருளாதார நிலைமை காரணமாக ஏற்படப்போகும் நெருக்கடியை எதிர்கொள் வது எங்ஙனம் என்று அரசு திணறிக்கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில் அரசின் பொருளாதாரக் கொள்கை நிலைப்பாடு தொடர்பாக அரசுக்குள்ளேயே முரண்பாடு முற்றிவருவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீல.சு.கட் சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இதுவிடயத்தில் 'லடாய்' முற்றியிருக்கின்றது. பொருளாதாரக் கொள்கையில் உள் ளணி மோதலுக்கு இரண்டுமே தயாராகி வருகின்றன என் கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் ஜே.வி.பியின் கெடுபிடி நிலைப் பாட்டில் தடைப்பட்டு நிற்கின்றன. தமிழர் தரப்பின் நியாய மான கோரிக்கைகளுக்குப் பிரதான பங்காளிக் கட்சி யான ஜே.வி.பியை மீறி, இணங்கமுடியாமல் திண்டாடு கிறார் - தடுமாறுகிறார் - அரசுத் தலைவியான ஜனாதிபதி.

சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன் நகராத காரணத்தினால், முன்னர் தான் வழங்கியிருந்த உறுதிமொழிக்கு அமையப் பல்லாயிரம் கோடி ரூபா உத வித் திட்டங்களுக்கான நிதியை வழங்குவதை இப்போ தைக்குத் தரமுடியாது என்று சர்வதேச சமூகம் கை விரித்துவிட்டது.

அதனால், பொருளதார நெருக்கடியை எப்படிச் சமா ளிப்பது என்று விழி பிதுங்குகிறது அரசு.

முன்னைய அரசின் பாணியில் அரச உடைமைகள் பலவற்றை - பல்வேறு அரச நிறுவனங்களை - தனியார் மயப்படுத்துவதன் மூலம் பெருமளவு நிதியையும் அத்திட்டத்தின் கீழ் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் உத வித் திட்டங்களின் கீழ் நிதியையும் பெற்றுக்கொள்ள லாம் என ஜனாதிபதியும் அவரது அணியினரும் சிந்திக் கின்றனர்.

ஆனால், 'சிவப்புச் சட்டைக்காரர்களான' ஜே.வி.பி யினர் தமது அமைப்பு ஊறித்திளைத்த இடதுசாரிக் கொள்கைப் போக்குக்கு அமைய தனியார் மயமாக்கலுக் கும் சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி போன்ற வற்றுக்கு நாட்டை அடகு வைப்பதற்கும் எதிராகப் பொங்கி எழுந்து நிற்கின்றார்கள்

'ஐ.தே.முன்னணியின் தனியார் மயமாக்கலுக்கும் இந்த அரசு எந்தனிக்கும் தனியார் மயப்படுத்தலுக்கும் இடையில் பெரிய வேறுபாடு ஏதும் இல்லை. தனது திட் டத்தை இந்த அரசு தொடர்ந்து முன்னெடுக்க முயலுமா னால், அரசுக்கு எதிராக வீதிக்கு இறங்கவும் தயார்!' - என்று எச்சரித்திருக்கின்றார்கள் ஜே.வி.பியினர்.

ஆக, சமாதான முயற்சிகளை முன்னெடுக்க விடாமல் தடுக்குப் போட்டதன் மூலம் வெளிநாட்டு உதவிகள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைக்குத் தள்ளிய ஜே.வி.பி., மாற்று ஏற்பாடாக அரசுக்குக் கிடைக்கக் கூடிய நிதியையும் - தற்போதைய தவிர்க்கமுடியாத நெருக்கடியை எதிர்கொள்வதற்கு உள்ள ஒரே வழி யையும் - தங்களது கொள்ளைப் போக்கைக் காட்டித் தடுக்கின்றார்கள் என்ற எரிச்சல் அரசுத் தலைமைக்கு.

அதைவிட, நாடு எதிர்கொள்ளப் போகும் பொருளா தார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வேறு மார்க்கம் ஏதும் இல்லாத நிலையில், இப்படி கொள்கைச் சித்தாந் தம், நிலைப்பாடு என்ற ஜே.வீ.பியின் போக்குக்கு விட் டுக்கொடுத்தால், நாளை மக்களுக்கு முகம்கொடுக்க முடியாத மோசமான நிலைமைதான் ஏற்படும் என்பதை ஸ்ரீல.சு.கட்சியின் தலைமை உணரத் தலைப்பட்டிருப்ப தாகவும் தெரிகின்றது.

இந்த நிலைமையில் - பின்னணியில் - ஜே.வி.பி. - ஸ்ரீ.ல.சு.க. கூட்டு தொடர்ந்து தாக்குப்பிடிப்பது என்பது துர்லபமே.

அதையும் மீறித் தாக்குப்பிடித்தால் அரசும், அதனால் மக்களும் அல்லாடுவது என்பது தவிர்க்கமுடியாததாக இருக்கும் என்பது நிச்சயம்.






மிதிவெடி அபாயக் கல்வி வாரத்தின் ஆரம்ப நிகழ்வு யாழ். நாவலர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். செயலக மிதிவெடி செயற்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எல்மோ ஆனந்தராஜா, மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யுனிசெவ் மாவட்டப் பிரதிநிதி யூடிற் புறுகுனு, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வீ.ஸ்ரீசக்திவேல், வைத்திய கலாநிதி என்.சிவராசா ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள் அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# மிதிவெடி அபாயக் கல்விவாரம் குடாநாட்டில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

மிதிவெடி அபாயக் கல்வி வாரம் யாழ். குடாநாட்டில் நேற்று ஆரம்பமாகியது.

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் ஏற்பாடு செய் துள்ள இந்த மிதிவெடி அபாயக் கல்வி வாரம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை குடாநாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட வுள்ளது.

இந்த வாரத்தின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக இணைப்பாளர் எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மேல திக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, செயலக மிதிவெடி செயற் பாட்டு அலுவலகப் பொறுப்பதிகாரி எல்மோ ஆனந்தராசா, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்தி வேல், யுனிசெவ் நிறுவன யாழ். மாவட்டப் பிரதிநிதி யூடிற் புறுகுணு, உலக சுகாதார நிறுவன ஆலோசகர் வைத்திய கலாநிதி என்.சிவராசா மற்றும் குடும்பப் புனர்வாழ்வு நிலைய இணைப்பாளர் எஸ்.சிதம்பரநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை - கண்ணிவெடி அபாயக் கல்வி வாரத்தை முன்னிட்டு கோப்பாய் பகுதி மக்கள் நாளை மாபெரும் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

'கண்ணிவெடிகளைப் புதைக்காதீர்கள்' என்ற கோஷத்துடன் இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-5)

# இனவாதம் முடிவுக்கு வரவேண்டுமானால் இலங்கை வரலாற்றைத் திருத்தி எழுதவேண்டும்

## சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத் தெரிவிப்பு



வவுனியா,ஜூன்22

இனவாதம் முடிவுக்குக்கொண்டு வரப்படவேண்டுமானால் இலங்கை வர லாறு மீண்டும் ஒரு தடவை திருத்தி எழுதப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் போராட் டம் தொடர்பான இரு சிங்கள நூல்க ளின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வரலாற்றில் நீண்டகாலமாகத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பகை இருந்து வருவதாகக் காட்டப்பட்டுள்ளமையானது முற்றிலும் தவறானதொன்றாகும்.

அத்துடன், வரலாற்றில் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சிங்கள மொழியின் வளர்ச்சிக்குத் தமிழ் மொழியே காரணமாக இருந்தமையை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

மேலும் மொழி ஆராய்ச்சி, தொல்பொருளாய்வு போன்ற வற்றிலிருந்து எடுக்கப்பட்ட உண்மைகள் திரிபுபடுத்தப்பட்டுள் ளன. இந்த ஆய்வுகள் ஆங்கில மொழியில் காணப்படுவதால் தமிழர்களும், சிங்களவர்களும் இதன் உண்மைத் தன்மையினை விளங்கிக் கொள்ளமுடியாமல் உள்ளது என்பதே உண்மை.

எனவே, இந்த நாட்டின் வரலாற்றை மீண்டும் எழுதவேண்டும். அப்போதுதான் இனப்பகையை மாற்றமுடியும் என்றார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமா ரன் தமது உரையில் :-

ஒரு நீண்ட போராட்டத்தின் பின்னர் இன்று தமிழர்களும், சிங்களவர்களும் ஒன்றிணைந்து ஒரு நிகழ்ச்சியை நடத்துகின் றார்கள் என்றால் இது வரலாற்று நிகழ்வு என்றே கூறவேண்டும். இருவேறு துரும்புகளாக இருந்தவர்கள் இன்று ஒன்று சேர்ந்துள் ளனர். இது நிலைத்து நிற்கவேண்டும்.

நாங்கள் சிங்கள மக்களுக்கு விரோதமானவர்கள் அல்லர். சிங்கள மக்களின் நிலத்தைச் சூறையாடுபவர்களும் அல்லர். எமது உரிமைக்காக நாம் போராடுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி தொடர் பாக முன்வரைபு தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், அதைத் தருவதற்குக் கூட அதிகாரம் அல்லாத ஜனாதி பதி இறுதித்தீர்வைப் பற்றிப் பேசவேண்டும் என்று கூறுகிறார். நேரத்திற்கு நேரம் அவர் ஒவ்வொரு கதை சொல்லுகிறார். நாங் கள் நேர்மையாகப் பேசத் தயாராக உள்ளோம். அதற்கு அரசு தயாரா?

கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்த அரசோடும் பேசுவதற் குத் தயாராக உள்ளோம். தமிழர்களின் பெருமையினை இனி யும் சோதிக்கவேண்டாம். சந்திரிகா முன்னர் குமாரதுங்கவுடன் வந்து எம்மைச் சந்தித்தார். அந்த நல்ல மனிதனுக்காக மீண் டும், மீண்டும் எமது நல்லெண்ணத்தைக் காட்டி வருகிறோம். நாங்கள் எமது இடத்தில் சந்தோஷமாக வாழ்ந்தால்தான் நீங் கள் உங்கள் இடத்தில் சந்தோஷமாக வாழமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றார்.

விடுதலைப் புலிகளால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற 'தேதுன்ன' (வானவில்) என்ற சிங்கள மொழிப் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த க.வே.பாலகுமாரன் எழுதிய 'மௌனித் திருந்தவர் மனக்குரல்', தம்பி அப்பா எழுதிய 'வன்னியிலிருநது ஓர் மடல்' கடிதங்களின் தொகுப்பு ஆகிய இரு நூல்களே நேற்று வெளியிடப்பட்டன.

வவுனியா நகரில் உள்ள முத்தையா மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ் விற்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞான வேல் தலைமை தாங்கினார். வவுனியா மாவட்ட மகளிர் அர சியல்துறைப் பொறுப்பாளர் அலை வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.

வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் எஸ்.பேனாட் வைபவ ரீதியாக இவ்விரு நூல்களையும் வெளியிட்டு வைக்க, பிரபல சிங்களப் பாடகர் ஜயத்திலக பண்டார அவற்றைப் பெற்றுக் கொண்டார்.

வெளியீட்டுரையை எஸ்.திருநாவுக்கரசுவும், சிங்களப் பேரா சிரியர் சுசரித ஹம்லத் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர். பதி லுரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் வழங்கினார்.

சிங்களப் பாடகர் ஜயத்திலக பண்டாரவுக்கு க.வே.பால குமாரன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். பேராசிரியர் சுசரித ஹம்லத்துக்கு கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பொன்னாடை போர்த்துக் கௌரவித் தார். (எ-ரி-164)

# தபாலகக் கட்டடம் அமைக்க பண்டத்தரிப்பில் காணி தேவை

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை நிறுவுவதற்குப் பொருத்தமான இரண்டு பரப்புக் காணி தேவைப்படுவதாகப் பண்டத்தரிப்ப தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

தபாலகத்திற்கு அன்பளிப்பாக வழங்க முன்வருவோர் அது பற்றித் தம்மிடம் தொடர்புகொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த பல வருட காலமாக மேற்படி தபால் அலுவலகம் தனியாருக்குச் சொந்தமான கட் டடம் ஒன்றில் இயங்கி வந்தது. தெரிந்ததே. காணி கிடைக்கும் பட்சத்தில் அதில் தபாலகக் கட் டடம் நிறுவுவதற்கு தபால் திணைக் களம் நிதி ஒதுக்கீடு செய்து தருவதற்கு முன்வந்துள்ளதாக வும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

### நாளை

ஆனி 9
புதன்கிழமை
(23.06.2004)
திதி: பஞ்சமி
பகல் 9.03 வரை.
நட்சத்திரம் : மகம்
இரவு 7.03 வரை
சுபநேரம்:4.25 - 5.55
ராகுகாலம்: 11.55 - 1.25
மாணிக்கவாசகர் குருபூசை
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆணும் பெண்ணும் நிகர்
எனக் கொண்டால் அறிவில்
வையகம் தழைக்கும்.

# சுழிபுரம் கிழக்குக்கான பஸ்சேவை சீரில்லை எனப் பயணிகள் புகார்

வலி.தென்மேற்கு,ஜூன்22

யாழ்.மத்திய பஸ்நிலையத்திலிருந்து பனிப்புலம் ஊடாக சுழிபுரம் கிழக்கு வரை நடத்தப்படும் வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பஸ்சேவை சீராக நடைபெறுவதில்லை என புகார் தெரிவிக்கப்படுகின்றது. சில தினங்கள் தொடர்ந்து பஸ் சேவை நடைபெறுவதில்லை என்றும் -

இதனால் பனிப்புலம், சுழிபுரம் கிழக்கு, காலையடி ஆகிய இடங்களைச் சேர்ந்த பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் - கூறப்பட்டது.

மேற்படி சேவையை நேரசூசிப்படி நடத்துவதற்கு நட வடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பனிப்புலம் கிராம அபி விருத்திச் சங்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளருக்குக் கடந்த வாரம் அனுப்பி வைத துள்ள கடிதத்தில் கோரியுள்ளது. (எ-135)

# காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நிரம்பிவழிகின்றனர்

தென்மராட்சி,ஜூன்22

அண்மையில் பெய்த மழையை அடுத்துத் தென்மராட்சிப் பிரதேசத்தில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெற வருவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஆஸ்பத்திரி வார்ட்டுகள் காய்ச்சல் நோயாளர்களால் நிறைந்து விறாந்தைகளிலும் இடமின்மையால் சில நோயாளர்கள் உரிய சிகிச்சையளிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அண்மைக்காலமாக ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களில் அரைவாசிக்கும் மேலானோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரிப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

ஆஸ்பத்திரியில் தினமும் 400 இற்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (எ-117)


நடராசாவும் சபாநாதனும்
சட்டத்தரணிகள்

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55(1)

மல்லாகம் / மாவட்ட
நீதிமன்றத்தில்
மாதன் செல்வம்,
மயிலங்காடு, ஏழாலை தெற்கு,
ஏழாலை.

வழக்கு இல.நானாவிதம்/71./04 எதிர் வழக்காளி/கள்

1. இளையவீ ஆனந்தன் (தலைவர்)
2. சண்முகநாதன் இரத்தினவடிவேல் (செயலாளர்)
3. நாகமுத்து கணேசமூர்த்தி (பொருளாளர்)

சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை. கோட்டைக்காடு. மல்லாகம்.

எதிராளி/கள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிகளாகிய உங்களுக்கு எதிராக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளியாகிய மாதன் செல்வம் இந்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் நாள் அன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன்முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர்தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ம.செல்வரத்தினம்
பதிவாளர், மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
பிரதி பிஸ்கால் சமாதான நீதிவான் மல்லாகம்.

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதிபற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம் பதிவாளர்
(33341) 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாளாகிய இன்று. (34-24-14-19)



Swan
சுவான் டீசல் என்ஜின்

- நம்பிக்கையில் தலைசிறந்தது
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு

அதிஉயர் விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு



Access Graphics

ஏக முகவர்கள்:
சென்ட். அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்.
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை: 2324261-5, 2337283-5 ,பெக்ஸ்: 2446554


## மரண அறிவித்தல்

அருட்சகோதரி

### மேரி சிறில் மத்தியாஸ் (தி.கு.)

ஊறணி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும், தற்பொழுது யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்துவந்தவருமான அருட்சகோதரி மேரி சிறில் மத்தியாஸ் (தி.கு.) 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.06.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல 3.30 மணிக்கு யாழ். திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியின் பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்
மாகாணத் தலைவி.
*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (33339) (24-14-19)

# ஊனமுற்ற மாணவிக்கு முச்சக்கரவண்டி

தென்மராட்சி,ஜூன்22

தாவளை, இயற்றாலைப் பகுதியில் கால் ஊனமுற்ற எட்டுவயதுடைய மாணவிக்கு முச்சக்கரவண்டி வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளார்.

தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் மூலம் இந்த மாணவிக்கு முச்சக்கர வண்டி விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வேல் முருகன் சசிக்கா என்ற மாணவிக்கே முச்சக்கரவண்டி வழங்கப்படவுள்ளது. (-8-117)

# மருதடி விநாயகர் ஆலயத்தில் புனரமைப்புப் பணி

மானிப்பாய்,ஜூன்22

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தற்போது புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயக் கருவறையைக் கருங்கற்களால் அமைக்கும் பணியில் தென்னிந்திய மாமல்லபுரச் சிற்பக் கலைஞர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

மேற்படி ஆலயத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற கும்பாபிஷேகப் பணியைத் தொடர்ந்தே இவ் விசேட புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (-10-90)

# வடமராட்சிப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டிகள்

வடமராட்சி,ஜூன்22

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னதாக இவ்வலயத்துக்குட்பட்ட பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கல்வி கோட்டங்களில் கோட்ட மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (-8-173)


மாணவர்களுக்கு விசேட சலுகை
POWER GYM
Body Care & Fitness Center
நவீன உடற்பயிற்சி நிலையம்
230/1, நாவலர் வீதி
(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 252098
(34-14-24-19) (33111)

விற்பனைக்கு
தச்சுவேலை செய்யும் மெஷின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும எலக்ரிக் ரில்லர்கள், றவுட்டாகள் (டிசைன் செய்யும் மெஷின), கிறைண்டர்கள், ஏனைய தச்சு வேலை செய்யும் மெஷின் வகைகள் அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:
கி.சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம். (33137)

தேவை
றொசானி காமன்ஸுக்கு தையல் தெரிந்த பெண்கள் தேவை.
கட்டிங் வெட்டத் தெரிந்தவர்களும் தேவை.
தொடர்பு:
றொசானி காமன்ஸ்
263/1, இராஜகாரியா லேன்,
மானிப்பாய்.
(33165)(21-14-19-24)

வெளிவந்துவிட்டது!
2004 ஆம் ஆண்டு பாடத்திட்டம்
தரம் - 6
ஆங்கிலப் பயிற்சி நூல்
ஆக்கம்:
திரு. ஆர். பிரேமதாசா




ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.


# கல்விச்சாலைக் காட்சிகள்



ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட மலசலகூடத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வர்த்தகர் க.குணரத்தினம் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

அதிபர் க.வே.இராசதுரை மற்றும் ஆசிரியர்களும் படத்தில் உள்ளனர். *(படம்: வரணிச் செய்தியாளர்)*



சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

வலய நிர்வாக உத்தியோகத்தர் செல்லையா மெற்றாஸ்மயில் மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர். (-10)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சபா.ஜெயராசா, சிறப்பு விருந்தினரான உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி.வடக்குச் செய்தியாளர்)*



திருநெல்வேலி றோ.க.த.க. வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி க.கேசவன் மற்றும் விருந்தினர்கள், மாணவர்களால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். அதிபர் க.கணேசமூர்த்தியும் படத்தில் உள்ளார். (-10)


# அணு ஆயுத சோதனை இனிமேல் இல்லை

# இந்தியா - பாகிஸ்தான் கூட்டு அறிவிப்பு!

புதுடில்லி,ஜூன்22

**இனிமேல் அணு ஆயுத சோதனை நடத்தமாட்டோம் என்று புதுடில்லியில் நடந்த பேச்சுக்குப் பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.**

**பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் தாரிக் உஸ்மான் ஹைதர் தலைமையில் ஒரு தூதுக்குழு புதுடில்லி வந்தது. இந்தக் குழு இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஷீல் காந்த் சர்மா தலைமையிலான அதிகாரிகளுடன் 2 நாள் பேச்சுக்களை நடத்தியது.**



அணு ஆயுதம் தொடர்பான நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் பற்றிய இந்தப் பேச்சுக்களின் முடிவில் இரு தரப்பும் ஒரு கூட்டறிக்கையில் கையெழுத்திட்டன.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

1999ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர்கள் வாஜ்பாய் - நவாஸ் ஷெரீப் இடையே ஏற்பட்ட லாகூர் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவற்காகத் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் நாயகங்களுக்கு இடையே இப்போதுள்ள நேரடி தொலைபேசி வசதி (ஹொட்லைன்) மேம்படுத்தப்படும். அத்தோடு, இரு நாடுகளின் வெளிவிவகாரச் செயலாளர்களுக்குமிடையே நேரடி தொலைபேசி வசதி செய்துகொடுக்கப்படும்.

இதன்மூலம், தவறாகப் புரிந்து கொள்வது தவிர்க்கப்படும். அணு ஆயுதப் பிரயோகம் தொடர்பான ஆபத்து குறைக்கப்படும்.

தேசப் பாதுகாப்பைக் கருதி இரு நாடுகளும் அணு ஆயுதம் தயாரிக்கும் திறனை வளர்த்துக் கொண்டன என்பதை இரு நாடுகளும் அங்கீகரிக்கின்றன.

அதேபோல், அணு ஆயுதங்கள் திருட்டுப்போகாமல் பாதுகாக்கப்படும். அதிகாரபூர்வமானவர்கள் தவிர மற்றவர்கள் இதைப் பயன்படுத்த மாட்டார்கள் என்றும் உறுதிமொழி அளிக்கப்படுகிறது.

- இவ்வாறு அந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தூதுக்குழுவினர் புதுடில்லியில் வெளிநாட்டு அமைச்சர் நட்வர் சிங்கையும் சந்தித்துப் பேசினர். (8)

## கண்ணீரிலும் 'சார்ஸ்' கிருமி

கடந்த சில மாதங்களுக்கு முன்பு சீனாவில் உருவான 'சார்ஸ்' நோய் உலகம் முழுவதும் பரவி 800 இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலியெடுத்தது. இது இப்போது சற்று ஓய்ந்து விட்டாலும் 'சார்ஸ்' ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இப்போது 'சார்ஸ்' நோயாளிகளின் கண்ணீரிலும் 'கரோனா' வைரஸ் கிருமிகள் இருப்பதாக இங்கிலாந்து விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இனி சார்ஸ் நோயாளிகளை அழவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். (8)

## கிளிண்டனின் வரலாற்றுக்கு ஒரு கோடி டொலர் அட்வான்ஸ்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன் தனது வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக எழுதி இருக்கிறார். 'மைலைப்' என்ற இந்த புத்தகம் இன்று விற்பனைக்கு வருகிறது. முதல் கட்டமாக 15 லட்சம் பிரதிகள் வெளியிடப்படுகின்றது.

957 பக்கங்கள்கொண்ட இந்தப் புத்தகத்தில் இளம் வயதில் அனுபவித்த துயரங்கள். அதிபர் பதவி வகித்த போது 'மோனிகாவுடன் செக்ஸ் உறவு உட்பட அனைத்து தகவல்களையும் இதில் கிளிண்டன் தெரிவித்து இருக்கிறார். ஒரு கோடி டொலர் அட்வானஸ் தொகையை கிளிண்டன் வாங்கி விட்டார். (8)

# பாப்பரசர் உட்பட 12 பேருக்கு அமெரிக்க அதிபரின் உயர் விருது



பாப்பரசர் ஜோன்போல் உள்ளிட்ட 12 பிரமுகர்களுக்கு அமெரிக்க அதிபரின் உயர் விருது வழங்கப்படுகிறது.

இது அமெரிக்காவின் மிக உயர்ந்த சிவிலியன் விருதாகும். அமெரிக்க அதிபரின் சுதந்திர விருது என இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த விருது முதன்முதலில் கடந்த 1945 ஆம் ஆண்டு அமெரிக்காவின் அதிபராக இருந்த ஹாரி ட்ரூமன் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. இரணடாம் உலகப் போரின்போது சிவிலியன்கள் ஆற்றிய அரிய சேவையை அங்கீகரிப்பதற்காக இந்த விருது வழங்கப்படுகின்றது.

பின்னர் இந்த விருதை 1963ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் ஜோன கென்னடி மீண்டும் ஏற்படுத்தினார். கலை, விளையாட்டு, வணிகம், அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து சேவையாற்றியவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

பாப்பரசர் ஆற்றிவரும் மிகச் சிறந்த சேவைக்காக இந்த உயர் விருது கடந்த 4ஆம் திகதி அவருக்கு வழங்கப்பட்டது. வத்திக்கான் நகருக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேரில் சென்று இந்த விருதை பாப்பரசருக்கு வழங்கினார்.

இந்த விருதுக்குத் தெரிவுசெய்யபபட்ட இதர 11 பேரில் இருவர் காலமாகி விட்டனர். எஞ்சிய 9 பேருக்கும் இறந்து போனவர்களின் சார்பில் அவர்களது உறவினர்களுக்கும் நாளை புதன் கிழமை அமெரிக்க அதிபர் மாளிகையில் இந்த விருதுகள் வழங்கப்படும்.

விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அமெரிக்காவின் பழம்பெரும் பாடகர் டோரிஸ் டே, 'புலிட்சா' விருது பெற்ற பத்திரிகையாளர் ராபர்ட் பாட்லே, முன்னாள் சட்டமா அதிபர் எட்வர்ட் டபுல்யூ. புருக்கி ஆகியோரும் அடங்குவர். (8)

# ஏவுகணை எதிர்ப்பில் ஐந்து வயதுச் சிறுவன்



அதிநவீன ஏவுகணைகளைத் தயாரிப்பதிலும் மற்ற நாடுகளில் இருந்து வாங்குவதிலும் பல்வேறு நாடுகள் தீவிரம் காட்டி வருகின்றன. இநதியாவும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே பதற்றமான நிலை நீடித்து வருவதால் அந்த நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள்ளன. இதற்கிடையே, அமெரிக்காவிடம் இருந்து ஒரு கோடியே 80 லட்சம் டொலர் செலவில் நவீன ஏவுகணைகளை தாய்வான் வாங்குகிறது.

பட்ஜெட்டில் இதற்கு நிதியும் ஒதுக்குகிறார்கள். இந்த ஏவுகணைகளை வாங்கிக் குவிப்பதைக் கைவிட்டு நிதியை, வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடக்கோரி தாய்வானின தாய்பேய் நகரில் பிரமாண்டமான பேரணி நடைபெற்றது. 5 வயதுச் சிறுவன் ஒருவனும் இதில் கலந்துகொண்டான். ஏவுகணைகள் வேண்டாம் என்பதை விளக்கித் தனது கன்னத்தில் அவன் 'ஸ்டிக்கர்' ஒட்டிக கொண்டுவரும் காட்சி இது. (8)

# பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் சர்வதேச விருது பெறுகிறார்

பிரிட்டிஸ் இளவரசர் சாள்ஸ், சுல்தான் ஹஸானால் போல்கியா சர்வதேச விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விருதுக்குப் பல்வேறு நாடுகளிலிருந்தும் மனுக்கள் வந்தன. இவற்றைப் பரிசீலிக்க அமைக்கப்பட்டிருந்த நடுவர் குழு ஒருமனதாக இளவரசர் சாள்ஸ்ஸைத் தெரிவுசெய்தது. இத்தகவலை இஸ்லாமிய ஒக்ஸ்போட் ஆராய்ச்சி மையம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தெரிவித்தது.

இஸ்லாம் மற்றும் மேற்கத்திய நாடுகள் இடையே பரஸ்பரம் புரிந்துணர்வு ஏற்படவேண்டியது அவசியம் என்று வெளிப்படையாக வற்புறுத்தி வந்துள்ளார் சாள்ஸ். இது தொடர்பாக உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தலைவர்களையும் ஊக்கப்படுத்தி வந்துள்ளார் என்று ஒக்ஸ்போட் ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை தெரிவித்துள்ளது.

# இந்தியா - அமெரிக்கா விரைவில் விண்வெளிக் கூட்டுறவு ஒப்பந்தம்

பெங்களூர்,ஜூன்22

விண்வெளி கூட்டுறவு தொடாபாக அமெரிக்காவுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துகொள்ளவுள்ளது.

பெங்களூரில் நேற்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விண்வெளி அறிவியலில் இந்திய - அமெரிக்க நாடுகளின் கூட்டுறவை அதிகப்படுத்துவது தொடர்பான கருத்தரங்கு நடைபெறுகின்றது.

இக்கருத்தரங்குக்குப் பின்னர் விண்வெளித் திட்டங்களில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்படும்.

இருநாடுகளிடையே கூடுதலாக கூட்டுறவை நீடிக்க உதவும் சாத்தியங்கள் குறித்து விஞ்ஞானிகள், கொள்கை உருவாக்குபவர்கள், நாசா விஞ்ஞானிகள் விவாதிப்பர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இதனை ஏற்பாடு செய்துள்ளது. அமெரிக்காவின் அறிவியல துறை, இந்தோ அமெரிக்க அறிவியல், தொழில்நுட்ப அமைப்பு ஆகியவையும் இணைந்து இக்கருததரங்கை நடத்துகின்றன. (8)

## விமானத் தாக்குதலில் 18 ஈராக்கியர் பலி !

ஈராக்கில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் தங்கியுள்ளதாகச் சந்தேகிக்கபபட்ட கட்டடத்தின் மீது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க இராணுவ விமானம் குண்டுவீசித் தாக்கியதில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

ஷியா முஸ்லிம் தீவிரவாதத் தலைவரான ஜார்கவியையும் அவரது குழுவைச் சேர்ந்தவர்களையும் கொல்வதற்காகப் பலூஜாவில் அவர்கள் மறைந்திருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

அமெரிக்க விமானம் தாக்கிய வீட்டில் தீவிரவாதிகள் இருந்தனரா என்பது குறித்து உறுதியான தகவல் இல்லை. (8)

## இஸ்ரேலியக் ஹெலி தாக்குதல்

காஸா குன்றுப் பகுதியில் உள்ள பலஸ்தீன அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் ஏவுகணைகளை வீசின. இதில் உயிர் சேதம் ஏதுமில்லை.

இஸ்ரேல் விமானப் படையின் இரு ஹெலிகொப்டர்கள் கடந்த சனிக்கிழமை இரவு இந்தத் தாக்குதலை மேற்கொண்டன. ஹெலிகொப்டர்கள் வீசிய ஏவுகணைகள் அகதி முகாம் பகுதியிலிருந்து உலோகத் தயாரிப்புத் தொழிற்சாலை மீது வீழ்ந்தன. அந்தப் பணிமனையும் அதன அருகிலிருந்த வீடுகளும் சேதமடைநதன. (8)

# உலக மலையாளிகள் மாநாடு பஹ்ரேன் நாட்டில் நடைபெறும்

வெளிநாடுகளில் வாழும் மலையாளிகள் பங்கேற்கும் சர்வதேச மாநாடு வளைகுடா நாடான பஹ்ரேனில் ஓகஸ்ட் மாதம் நடக்கிறது.

இந்த மாநாட்டில் 25 நாடுகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள் கலந்துகொள்கின்றனர். உலக மலையாளீ கவுன்சில் என்ற அமைப்பு ஏற்பாடுசெய்துள்ள இந்த மாநாடு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி 4 நாள்கள் நடைபெறுகிறது. முதன்முதலாக இந்த மாநாடு மேற்காசிய நாட்டில் நடக்கிறது. பஹ்ரேன் தகவல்தொடர்பு அமைச்சகம் 'கல்ப் எயார்' விமான நிறுவனம் ஆகியன மாநாட்டிற்குத் தேவையான உதவிகளை அளித்துள்ளன.

மாநாட்டில் மகாராஷ்டிர மாநில முன்னாள் கவர்னரும், மாநிலங்களவை உறுப்பினருமான டாக்டர் பி.சி.அலெக்ஸாண்டரும் முக்கிய விருந்தினர்களாகப் பங்கேற்கின்றார். சர்வதேச மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிகள் இந்த மாநாட்டு நிகழ்ச்சி பற்றி செய்தி சேகரிப்பதால் ஒருகோடி மலையாளிகள் இந்த நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி மூலமாகக் கண்டுகளிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள கேரள மக்களின் தொடர்புகளை வலுப்படுத்தவும், கேரள மாநில கலை, மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தோடும் இந்த மாநாடு நடைபெறுகிறது என்று இதன் அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். (8)

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

**அரசாங்க மானியங்கள் - இது ஆண்டொன்றுக்கு 15 தொடங்கி 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது - உலக மீன்பிடித் தொழிலுக்கு 20 சதவீத வருமானத்துக்குக் காரணமாக இருக்கும் அதேசமயம் அளவுக்கு மிஞ்சிய மீன்பிடித்தலையும் ஊக்குவிக்கிறது.**

# 'டிமிக்கி' கொடுத்து வந்த தேரரிடம் நீதிமன்றக் கட்டளை சேர்க்கப்பட்டது

கொழும்பு, ஜுன்22

வண.அக்மீமன தயாரத்ன தேரர் நாடாளுமன்றில் ஓர் உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்வதைத் தடுக்கும படியாக விடுக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளை ஒருவாறாக அவரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தகவலை கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களின் பதிவாளர் வெளியிட்டுள்ளார்.

வண. கத்தாலுவே ரத்தன சீக தேரோவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஒரு மனுவை அடுத்து வண.அக்மீமன தயாரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்தல் நாடாளுமன்றில் அமர்தல், சபையில் தோன்றுதல் , வாக்களித்தல் மற்றும் ஓர் உறுப்பினர் என்ற வகையில் செயற்படுத்தல் அனைத்தையும் தடைசெய்து நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

இந்தக் கட்டளையை கல்கிசை பிஸ்கால் அதிகாரி மூலம் அவருக்கு வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால், குறிக்கப்பட்ட இடத்தில் அவர் காணப்படவில்லை என்றும் - நீதிமன்றக் கட்டளையை பெற்றுக்கொள்வதை அவர் தவிர்த்து வருகிறார் என்றும் - அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். வழக்குத் தாக்கல் செய்திருந்த வண. கத்தலுவே ரத்னகார தேரர், தாம் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்றும் - தாம் சபாநாயகர் தெரிவின்போது அரசுக்குச்சார்பாக வாக்களித்தமையால மேற்படி கட்சியின் உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்பட்டு நெருக்குதல் கொடுக்கப்பட்டமையால் ராஜினாமாசெய்ய நேர்ந்ததாகவும் தெரிவித்து தனது ராஜினாமாக்கடிதத்தை செல்லுபடியாகாதென அறிவிக்கும் படியும் கேட்டிருந்தார்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான வண ஓமால்பே சோவித்ததேரர் வண. கொலன்னாவே சுமங்களதேரர், வண.உடவே தம்மாலோக்க தேரர் மற்றும் வண. அக்மீமன தயாரட்ண தேரர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கு விசாரணை கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமான போதும் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ப)

# சாவகச்சேரி நகரில் மேலும் சில இடங்களுக்கு மின்சாரம்

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மேலும் சில பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கு, கிராம்புவில், மருதடி, பெருங்குளம் ஆகிய பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டது.

சாவகச்சேரி வடக்கு மருதடிச் சந்தியில் வைக்கப்பட்டுள்ள மின்மாற்றி மூலம் இப்பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. (எ-117)

## அந்தியேட்டி அழைப்பு

(22.06.2004)

மண்ணில் 28 - 05 - 1934



விண்ணில் 23 - 05 - 2004

**திருமதி பாக்கியம் இராசரத்தினம்**

பிறந்ததால் பெற்றோர் பெற்றனர் பாக்கியம்!
பதியுடன் பிள்ளைகள் கொண்டதோர் பாக்கியம்!
உற்றமும் சுற்றமும் கண்டதோர் பாக்கியம்!
கூற்றுவன் பறித்ததேன் இதுவோ... உன் யோக்கியம்?

23.05.2004 அன்று இறையடிசேர்ந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (22.06.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார் உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழனி. டச்சு வீதி.
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

(33266)(39-18-14)

குடும்பத்தினர்.

## ஜுலை 10 இன் பின்னரே பட்டதாரிகளுக்கு நியமனமாம்!

கொழும்பு, ஜுன்21

மாகாண சபைத் தேர்தல்கள் முடிவுற்று ஜுலை 10 ஆம் திகதிக்குப் பின்னரே பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அரசியல் பேதங்களின்றி பட்டதாரிகளின் தகுதிக்கேற்ப இந்நியமனங்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசின் உயர் மட்டப்பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். (எ-9)

## முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம் 14 - 10 - 1918



மறைவு 04 - 07 - 2003

**மிருசுவில் அம்பலவாணர் செல்லத்துரை**

(முன்னாள் கிராம சேவையாளர்)
(மிருசுவில் - கண்டாவளை)
(திதி:-22.06.2004)

அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிவிளக்காய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழி காட்டிச்சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகளை எங்கள் நெஞ்சம் மறக்குமோ? நீங்கள் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் எங்களுக்குள்ளே நீங்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:- க. கணபதிப்பிள்ளை.
(மருமகன்)
"செல்வகிரி"
மிருசுவில்,

துயரம்நிறைந்த நினைவுகளுடன்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(33280)(39-18-14)

# மிதிவெடி அபாயக்கல்வி வாரம்

## ஜுன் 21 தொடக்கம் ஜுன் 27 வரை

### மிதிவெடி, வெடிபொருள்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொதுமக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்.

★ நாங்கள் செல்லும் இடங்களுக்கு முன்னர் பாவித்த, பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.


★ நாம் புதிய இடங்களுக்குச் செல்லும்போது அவ்விடத்தின் மிதிவெடி அபாயம் பற்றி அப்பிரதேச வாசிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்வோம்.

★ எமது பிரதேசத்துக்குள் புதிதாக வருபவர்களுக்கு எமது பிரதேசத்தின் மிதிவெடி நிலைமை பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்போம்.

★ மீளக்குடியமரும் பிரதேசமாக இருப்பின் அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதிசெய்து மீளக்குடியமருவோம்.

★ இனம் புரியாத மர்மப் பொருள்களைக் கண்டால் மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்திற்கோ அல்லது மதிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கோ அறிவிப்போம்.

★ மிதிவெடிகள், வெடிபொருள்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவோம்.







**District Mine Action Office,Jaffna**

**மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்,யாழ்ப்பாணம்**

(சி-35696)(36-18-14)

# கருணாவுக்குப் பாதுகாப்பு அளித்துக்கொண்டு யுத்தம் ஒன்றுக்குத் தயாராகின்றார் ஜனாதிபதி

## முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட கருணாவைப் பாதுகாப்பாக ஒளித்து வைத்துக்கொண்டு யுத்தமொன்றுக்கான முஸ்தீபுகளில் இறங்கி இருக்கிறார் ஜனாதிபதி. இது பாரிய விளைவுகளையே ஏற்படுத்தும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்கா இப்படிக் கூறினார்.

எட்டியாந்தோட்டை ஐக்கிய தேசியக் கட்சி கிளைகளைச் சேர்ந்த முக்கியஸ்தகர்களின் கூட்டம் ஒன்றில் திஸாநாயக்கா பேசினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"யுத்தத்தின் விளைவுகளை நாம் அனுபவரீதியாக உணர்ந்துவிட்டோம். புலிகளில் ஒருவரின் இழப்புக்கு இராணுவத்தினரில் இருவரைப் பலிகொடுத்திருக்கிறோம். யுத்தத்தினால் அங்கவீனர்களாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களை வீட்டில் வைத்து அரசு உணவு போடும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை பூஜ்யமாக்கிவிட்ட பிறகுதான் 2001ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் நிகழ்ந்தது. ஆறாண்டுகளுக்கு நாட்டை ஆள வேண்டிய அரசை ஈராண்டு காலத்தில் கலைத்துவிட்ட ஜனாதிபதி, இன்று எதனையும் நிறைவேற்றமுடியாத நிலையில் இருக்கிறார்.

"உலக நாடுகளின் கவனத்தைத் தம் பக்கம் ஈர்த்துக்கொண்டிருக்கும் புலிகளுடன் பேச்சு மூலமாக தீர்வொன்றுக்கு நாம் முன்வந்தபோது அதனை எதிர்த்தவர்கள், இன்று அரசியல், யுத்த சாணக்கியம் மிகுந்த புலிகளைச் சீண்டி விளையாடுவது நல்ல அறிகுறி ஆகாது. எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் நாம் வென்றாலும்; தோற்றாலும் தருணம் பார்த்து ஆட்சியைக் கைப்பற்றுவோம். அடுதத ஜனாதிபதித் தேர்தலில் சகல இன மக்களின் ஒத்துழைப்போடும் வெற்றி பெறுவோம்"

- இப்படி அவர் கூறினார்.

சப்ரகமுவ மாகாண சபையின் கேகாலை மாவட்ட வேட்பாளர் பி.அந்தோனிமுத்து பேசுகையில் - "இம் மாவட்டத்தில் சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்களைத் தமிழ்மக்கள் ஆதரிக்கின்றனர்.

"ஆனால், தமிழ் வேட்பாளர்களை தமிழ் மக்களைத் தவிர ஏனையோர் ஆதரிப்பதில்லை. இந்நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்படல் வேண்டும்" - என்றார்.

வேட்பாளர் நிஹால்பாரூக், எட்டியாந்தோட்டை பிரதேசசபைத் தலைவர் நிஹால் ரோகிகுமார, பிரதேச சபை உறுப்பினர் சி.கே.முருகேசு உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 10 பேருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

சட்டவிரோதமாக மணல் ஏற்றிய பத்துப் பேருக்கு யாழ். நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

மானிப்பாய்.சங்கரப்பிள்ளை வீதியைச சேர்ந்த ரஞ்சித்குமார் ஒபிஸ்ரன், முள்ளி வீதி, அரியாலையைச் சேர்ந்த சின்னராசா றமேஷ், ஏ.வி. றோட், அரியாலையைச் சேர்ந்தவர்களான நடராஜா சிறிதரன், சுப்பையா திரவியராசா, உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த ஏ.மயூரன், பொன்னம்பலம் வீதி, அரியாலையைச் சேர்ந்த சத்தியலிங்கம் மஞ்சுரா, முள்ளி வீதி, அரியாலையைச் சேர்ந்த அன்னலிங்கம் யசோதரன், நெடுங்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த தர்மலிங்கம் நடராஜா ஆகியோரை தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் -

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சோந்த சுப்பிரமணியம் தங்கவேலு, துரைராசா கணேசலிங்கம் ஆகிய இருவரையும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறும் -

யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். (எ-13)

# பெண்ணைக் கொடுமைப்படுத்திய அவரது மகளும் மருமகனும் கைது!

கொழும்பு,ஜூன்22

பெற்ற தாயைக் கொடுமைப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் மகள் ஒருவர் கைதானார். அவருக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் மகளின் கணவனும் கைதானார். அவர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்களை நீதிவான் 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்.

மகளது வீட்டில் வாழ்ந்து வந்த 65 வயதுடைய இந்த வயோதிப மாது தனது மகளும், மருமகனும் தன்னைக கொடுமைப்படுத்துகிறார்கள் என்று நீர்கொழும்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்தே அவர்களிருவரும் கைது செய்யப்பட்டனர். (ஒ-ரி)



இணுவில் சைவத்திருநெறிக் கழக அறநெறிப் பாடசாலையின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின்போது இணுவில் கிராமத்தின் கல்வி, ஆன்மீக வளர்ச்சிக்குப் பணிபுரிந்த பெரியார்கள் எண்மரின் திருவுருவப் படங்கள் அறிநெறிப் பாடசாலை அன்னதான மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் . செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் திரைநீக்கம் செய்து வைககிறார். அருகில் கழகத் தலைவர் செ.தவராசா, செயலாளர் ந.காசிவேந்தன் ஆகியோார் காணப்படுகின்றனர்.

# சுகாதார மருத்துவ மாதரை நியமிக்க நடவடிக்கை

கொழும்பு,ஜூன்22

வடக்கு - கிழக்கில் தற்போது உள்ள குடும்ப சுகாதார மருத்துவ மாதர்கள் வெற்றிடங்களை நிரப்ப 600 பேரைச் சேர்த்துக் கொள்வதற்கு மாகாண சுகாதார, தேசிய மருத்துவம் மற்றும் மகளிர் விவகார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட இருக்கும் 300 பேருக்கு ஒன்றரை ஆண்டு காலப் பயிற்சி வழங்கப்படும். அதுவரை அந்த வெற்றிடங்களை குறுகிய காலப் பயிற்சி வழங்கப்பட்ட 300 பேரைக் கொண்டு நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறுகிய காலப் பயிற்சி பெற உள்ள குடும்ப சுகாதார மருத்துவ மாதர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

ஒன்றரை ஆண்டு காலப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னர் குறுகிய காலப் பயிற்சி மேற்கொண்டவர்கள் குடும்ப சுகாதார மருத்துவ மாதர்களாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளனர். மாகாண சுகாதாரச் செயலாளரான ஆர்.எம்.டீ. ரத்நாயக்க இத்தகவல்களைத் தெரிவித்தார்.

வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் மாவட்ட ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பாக அரசு ஒரு கோடி ரூபா நிதியை மாகாண சுகாதார சேவை அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. (ஒ)

## மோசமான நிலையில் பறாளாய் வீதி

சுழிபுரம்,ஜூன்22

சுழிபுரம் - பறாளாய் விநாயகர் கோயிலுக்குச் செல்லும் பிரதான வீதி போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருக்கிறது.

நீண்ட காலமாக திருத்தங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. மழை காலத்தில் வீதியின் நடுவே நீர் நிறைந்து நிற்கும்.

கால் நடையாகச் செல்பவர்களுக்கு பெரும் இடைஞ்சலாகவுள்ளது. தற்போது விநாயகர் ஆலய உற்சவம் நடைபெறுகிறது.

இந்த வீதியைத் திருத்தி உதவுமாறு ஆலய தர்மகர்த்தா சபையினர் மகஜர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (4-28)

## புடைவைக் கைத்தொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

கொழும்பு,ஜூன்22

நாட்டிலுள்ள புடைவைக் கைத்தொழிற் பாடசாலைகளில் பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய விண்ணப்பங்களைப் புடைவைக் கைத்தொழிற் திணைக்களம் கோரியுள்ளது.

தரம் 8வரை கல்விகற்றோர் ஒரு வருடகாலப் பயிற்சி நெறிக்கும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் இருவருட காலப்பயிற்சி நெறிக்கும் அனுமதிக்கப்படுவர் எனப் புடைவைக் கைத்தொழிற் திணைக்களப் பணிப்பாளர் வினிதா செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் அம்பாறை, சம்மாந்துறை, யாழ்ப்பாணம், தென்மாகாணத்தில் அம்பாந்தோட்டை, மாத்தறை, மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை, ஊவாமாகாணத தில் பதுளை, மேல்மாகாணத்தில் கொழும்பு, வடமேல் மாகாணத்தில் குருநாகல், அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள புடைவைக் கைத்தொழில் பாடசாலைகளுக்கு ஜூலை மாதம் முதலாம் திகதி நேரடியாகச் சமுகமளித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## 'டயலொக்' கோபுரம் தென்மராட்சியில் இயங்குகிறது

சாவகச்சேரி,ஜூன்22

தென்மராட்சிப் பிரதேசத்துக்கான டயலொக் நிறுவனத்தின் தொலைபேசிப் பரிவர்த்தனைக் கோபுரம் இயங்கத் தொடங்கியுள்ளது.

'டயலொக்' தொலைபேசிப் பரிவர்த்தனைக்காக சாவகச்சேரியில் தனியாருக்குச் சொந்தமான 'பராசக்தி' மூன்று மாடிக் கட்டடத்தில் சுமார் 70 அடி உயரமான இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-31)

# யாழ்.இளைஞர்களின் விவரம்; டென்மார்க் குழு திரட்டியது

யாழ்ப்பாணம்,ஜூன்22

டென்மார்க் நாட்டின் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இங்குள்ள இளைஞர்கள் சம்பந்தமான விவரங்களைச் சேகரித்துச சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்த இக்குழுவினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் மன்றப் பிரதிநிதிகள், விரிவுரையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கல்வி கற்றுவிட்டு வேலையற்று இருக்கும் இளைஞர்கள், யுவதிகளின் நிலைமை சம்பந்தமாகவே டென்மாரக விரிவாகக் கேட்டறிந்ததாக அறிய வந்தது.

யாழ்மாவட்டப் பொது அமைப்புகள் ஒன்றியத் தலைவர் சூசிறில் செயலாளர் க.கனகலிங்கம் ஆகியோரையும் இவர்கள் சந்தித்துள்ளனர்.

பாடசாலைக் கல்வியை முடித்து வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகள் சம்பந்தமாக இவர்களுடன் கலந்துரையாடிச் சென்றுள்ளனர்.

இக்குழுவினர் வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்திற்கும் சென்று அங்குள்ள நிலைமைகளையும் ஆராயவிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (4-86)

# காந்திசேவா சங்கத்தை மீள இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்22

முன்னாள் அதிபர் ஹண்டி பேரின்பநாயகத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அகில இலங்கை காந்திசேவா சங்கத்தை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும் செயலாளராகவும் பதவி வகித்த சோ.க.தம்பிப்பிள்ளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றார்.

1953, 1975 களில் சர்வோதய மாநாடுகளை நடத்திய மேற்படி சங்கம், காந்தி நிலையம், உருத்திரபுரம் மாணவர் விடுதி, 'காந்தீயம்'என்ற சஞ்சிகை, காந்திகிராமம், தன்நிறைவு இயக்கம் (கிராம சுயராஜ்யம்), இரத்மலானை அச்சகம் ஆகியவற்றையும் இயக்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

மீள இயக்கப்படவுள்ள இந்தச் சங்கத்தில் இணைந்து காந்திய - சர்வோதயக் கருத்துக்களைப் பரப்ப மற்றும் அக்கருத்துக்களைப் பின்பற்றி வாழவிரும்புவோரை 'சோ.க. தம்பிப்பிள்ளை, குமரவாசம், கொக்குவில் மேற்கு, கொக்குவில்' என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு முன்னாள் அதிபர் ஆசபாரத்தினம் அறிவித்துள்ளார். (எ)

# மாணவர் சீருடை பெறுவதில் பெற்றோர் சிலர் மெத்தனம்

## துணிகள் எலிகளுக்கு இரையாகும் அபாயம்!

தென்மராட்சி,ஜூன்22

தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கென அரசினால் வழங்கப்பட்ட இலவச சீருடைத் துணிகள் அந்தந்த பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் சில பெற்றோர் அக்கறை செலுத்தவில்லை என்று கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

சில கிராமசேவையாளர்கள் அலுவலகங்களில் சீருடைத்துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்றும் -

அங்கு பெருமளவான துணிகள் எலிகளால் நாசமாக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

சீருடைத் துணிகளுக்கு விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேச மாணவர்களின் பெற்றோர் இம்மாத இறுதிக்குள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் சீருடைகளும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும்-

தவறின் அவற்றினை கிராம அலுவலர்களிடமிருந்து மீளப்பெற பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (4-117)

# சட்ட விரோத மதுவிற்பனை; சமாதான நீதிவான் கைது!

சமாதான நீதிவான் ஒருவர் சட்டவிரோதமாக மதுபானம் விற்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அகில இலங்கை சமாதான நீதிவானும் ஆயுர்வேத வைத்தியருமான மேற்படி நபர் சட்டவிரோதமாக மதுபானம் விற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

குருநாகல் மொத்துஹெர என்ற பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. (ப)

# போரினால் பாதிப்படைந்த மாணவருக்கு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்22

கடந்த காலப் போரினால் உடல், உள, ரீதியாக பாதிப்படைந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு பாடசாலை செல்லாத மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும் போரின் போது அவயங்களை இழந்த மாணவர்களுக்கு சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதுடன் செயற்கை உறுப்புக்களை பொருத்தவும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் மூலம் அந்த மாணவர்களை பாடசாலைக் கல்வியில் ஈடுபடவைப்பதே தமது நோக்கமாகும் என்று சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4-12)

# உடுவில் கோட்ட மட்ட நாடகப் போட்டி முடிவுகள்

தெல்லிப்பழை,ஜூன்22

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுவர் நாடக அரங்க நிகழ்வில் இரண்டு நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்தார்.

இப்போட்டியில் உடுவில் கோட்டத்தைச் சேர்ந்த 20 பாடசாலைகள பங்குபற்றின. இதில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, உடுவில் அமெரிக்கன் மிஷன் ஆகிய பாடசாலைகளால் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட நாடகங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள வலய மட்ட நாடக அரங்கப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. அதே வேளை, நாடக அரங்கில் பங்குகொண்ட அனைத்து பாடசாலைகளின மாணவர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-150)

# இருதய நோயாளிக்கு உதவக்கோரிக்கை



இருதய நோயினால் பாதிக்கப்பட்ட மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த பேரம்பலம் கலைமகள் (வயது21) என்னும் யுவதியின் உயிர்காப்பு நிதியத்துக்கு உதவுமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கோரியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்த யுவதியை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளுமாறு டாக்டர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் -

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ள இரண்டு லட்சம் ரூபாவரை செலவாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த இந்த யுவதியின் வைத்தியச் செலவுக்கு நிதியுதவி வழங்கவிரும்புவோர் செல்வி கலைமகள் பேரம்பலம், சேமிப்பு கணக்கு இல: 19990, இலங்கை வங்கி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் எனச் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-117)

## கண்ணீர் அஞ்சலி



*எமது பாடசாலை அதிபரின் பாசமிகு அன்ரியும்*
*இவ்வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியருமாகிய*

அருட்சகோதரி **மேரிசிறில் மத்தாயஸ்**

(திருக்குடும்ப கன்னியர் சபை)

அவர்களின் மறைவால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும் திருக்குடும்ப கன்னியர் சபையினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(33352)
(34-11-18-24)

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகத்தினர்.

## யாழ்நகரின் மத்தியில்

அடிப்படை வசதிகளும் வாகனத் தரிப்பிட வசதிகளும் கொண்ட அலுவலகப் பாவனைக்கு

**அதிசிறந்த கட்டடம்**

**வாடகைக்கான கேள்விக் கூற்று விண்ணப்பம்**

இடம்: **யாழ்ப்பாணம் பல நோ.கூ..சங்க நடுவப் பணிமனைக் கட்டடத் தொகுதியின் இரண்டாம் தளம்**

விஸ்தீரணம்: 3648 சதுர அடி

விண்ணப்ப முடிவு திகதி: 2004.06.30

**வேலைநாள்களில் அலுவலக நேரத்தில் நேரில் பார்வையிட்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.**

குறிப்பு:
- ☆ அரச, அரசசார்பற்ற அல்லது பொது நிறுவனங்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ☆ ஒரு வருட வாடகைத் தொகை முற்பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

(24-11-18)

**127, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி-35729)

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம்.


## MONITORS விற்பனைக்கு

IBM, DELL, COMPAQ, ACER, SAMSUNG, DIAMOND VIEW, DIGITAL,

15" MONITORS-5800 குறைந்த விலைகளில்

தரமான மொனிட்டர்களை!

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள்!

**NORTH EAST TECHNOLOGIES**


34, Saddanathar Road, Nallur Jaffna.

T.P.: 021-2223786, 0777-708498 (hotline)

(சி-35732) (32-11-18-24)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 11 - 1918



மறைவு
04 - 07 - 2003

### அமரர் கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ் - நாச்சிமார் கோயிலடி)

திதி: 22-06-2004 ஸ்கந்த பஞ்சமி

அன்புக்கும் அரவணைப்புக்கும் மாறாத இருப்பிடமாய்
பண்போடும் பரிவோடும் பாசத்தோடும்
போற்றி எம் வாழ்க்கைக்கு பணிசெய்து
பரமனடி இணைந்து ஆண்டொன்றாகி விட்டாலும்
உங்கள் ஆசிகள் என்றும் எம்மை வழி நடத்தும்.

காமாட்சி துணை

*601/2, காங்கேசன்துறை வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (33347) (26-11-18-24)

என்றும் உங்கள் நினைவுடன்:
- குடும்பத்தினர்.

# தட்டெழுத்தாளர் சங்கப் பொதுக்கூட்டம்

கைதடி,ஜூன்22

யாழ். மாவட்டத்திலுள்ள மத்திய மாகாண அரச சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் ரி.கே.இராஜேந்திரராவ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். (எ-75)

# சனசமூக நிலையத்துக்கு மாடிக் கட்டடம்

வலி. தென்மேற்கு,ஜூன்22

சங்கானை மேற்கு சனசமூக நிலையத்திற்கு புதிய மாடிக்கட்டடம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

1949 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சனசமூக நிலையத்திற்குச் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகவும்

இப்பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் நலன்விரும்பிகள் இதற்கு நிதி உதவி வழங்கி வரு வதாகவும் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

# சமய அறிவுப்பரீட்சைப் பரிசளிப்பு விழா

கோண்டாவில்,ஜூன்22

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையமும் ஸ்ரீவாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகமும் இணைந்து சமய அறிவுப் போட்டியை நடத்தியது.

இதற்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவன உற்சவத்தன்று இரவு 7 மணிக்கு நடைபெறும். (எ-49)

## உடுவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள

# மூன்று நலன்புரி நிலையங்களுக்கு வீடமைப்புப் பொருள்கள் வழங்கப்படவில்லை

வலி. வடக்கு,ஜூன்22

உடுவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்படவில்லையென உடுவில் பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் 12 நலன்புரி நிலையங்கள் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவருகின்றன.

கடந்த ஆண்டு 9 நலன்புரி நிலையங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைப்பதற்குத் தேவையான பொருள்கள் வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சபாதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள கண்ணகை இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம், கந்தரோடையில் அமைந்துள்ள இக்கிரான் மற்றும் பிள்ளையார் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றிற்கு தற்காலிக வீடுகள் அமைப்பதற்கு வேண்டிய பொருள்கள் வழங்கப்படவில்லை.

இந்த நலன்புரி நிலையங்கள் அண்மையில் பெய்த மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அடுத்த மழைகாலம் நெருங்குவதனால் இந்த நலன்புரி நிலையங்களில் உள்ள கொட்டில்களைத் தற்காலிக வீடுகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நலன்புரி நிலையங்களில் உள்ளவர்கள் உடுவில் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-86)

**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுள்ளது**

## பொது முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம்

2004.05.12ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் மேற்படி பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இவ்விண்ணப்பத்திற்கான முடிவு திகதி 2004.06.30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். மேலதிக விவரங்கள் தேவைப்படின் வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- தலைவர் -

2004.06.21 (35278) (24-11-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கனகசபை சிவலோகநாதன்

*பிறப்பு:* 07-07-1954

*இறப்பு:* 23-05-2003

ஆண்டொன்று போனாலும்
ஆறவில்லை உம் துயரம்

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

*2ஆம் குறுக்குத் தெரு,*
*கொழும்புத்துறை.* (C/35731)(42-11-18-24)

**மனைவி, பிள்ளைகள்.**

*மொரட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கியமன்றம் வழங்கும்*

## தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் மற்றும் கணனியியல் கருத்தரங்கு

உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த படிமுறை நகர்வைப்பற்றிய தெளிவின்மையை மாணவர் மத்தியில் நீக்கும்முகமாக, மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி முழுநாள் நிகழ்வை முதற்கட்டமாக யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில் நடத்த ஒழுங்குசெய்துள்ளனர்.

இந்நிகழ்வில்:-

- ★ குழுநிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் (Career Guidence- Group Level)
- ★ குழுநிலை கணனியியல் கருத்தரங்கு (Group discussion of Computing)
- ★ ஆற்றல் மேம்படுத்துகை விவாதம் (Skill Development Programme)

என்பன உள்ளடங்கும்.

நடைபெறும் பகுதிகள்:

| யாழ்ப்பாணம் | வலிகாமம் |
|---|---|
| இடம் : யாழ். மத்திய கல்லூரி | இடம் : இராமநாதன் கல்லூரி |
| காலம் : 25.06.2004 வெள்ளிக்கிழமை | காலம் : 26.06.2004 சனிக்கிழமை |
| நேரம் : காலை 8.30 மணி | நேரம் : காலை 8.30 மணி |
| பிரவேசம் : இலவசம் | பிரவேசம் : இலவசம் |

குறிப்பு:-
1. 23.06.2004 முதல் மேற்படி பாடசாலைகளில் பதிவுகளை மேற்கொள்வதன்மூலம் உங்கள் வரவை உறுதிசெய்யவும்.
2. பாடசாலை மாணவ பிரதிநிதிகளுக்கான அழைப்பிதழ்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

*இளைஞர்களின் எதிர்காலத் திட்டமிடலை இலகுவாக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றி பயன்பெறுமாறுவேண்டுகிறோம்.*

தமிழ் இலக்கிய மன்றம்
மொரட்டுவை பல்கலைக்கழகம்

மொரட்டுவை பல்கலைக்கழக
மாணவர்கள்.

ஊடக அனுசரணை :- உதயன்

(C/35733)

# எதையும் தாங்குமா இதயம்...?





இருதய நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இராஜயோகப் பயிற்சி மிகவும் பயனளிப்பதாகும் எனக் கட்டுரையாளர் டாக்டர் சதீஸ்குமார் குப்தா (இருதய வைத்திய நிபுணர்) விளக்குகிறார்.

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் மவுன்ட் அபு என்ற இடத்தில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இவர், இது பற்றி விரிவாக ஆய்வுகள் நடத்தியுள்ளார். ஆய்வுகளால் கண்ட உண்மைகளை இக்கட்டுரையில் தந்துள்ளார் இருதய நோய் வைத்திய நிபுணரானஅவர்.

இக்கட்டுரையின் நான்கு பகுதிகள் ஏற்கனவே 'சுகநலம்' பகுதியில் பிரசுரமாகின. இது ஐந்தாவது பகுதியாகும்.

**உணவுப் பழக்கங்கள்**

இயற்கை உணவை உண்ணப் பழகிக் கொள்ளுங்கள். கொலஸ்ரோல் குறைவான நார்பொருள்கள் கூடுதலாக உள்ள புதிய தாவர உணவை, சரியான நேரத்தில் உணணுங்கள். எதை உண்ணுவது, எப்போது உண்ணுவது, எப்படி உண்ணுவது போன்ற மூன்று விடயங்களும் முக்கியமாகும். இயற்கையின் மடியில் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதாவது, சூரிய உதயத்தின் போது காலை நேரத்தில் அரை மணித்தியாலத்திற்கு விரைவாக நடக்கின்ற பயிற்சியைச் செய்யுங்கள். விரைவு நடை என்றால் ஒரு நிமிடத்தில் 110 அடிகள் நடக்கவேண்டும். பின் சூரிய அஸ்தமனத்தின், போது யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புள்ளிவிவரவியல் இன்னொரு சுதந்திரமான நபரினால் மேற்கொள்ளப்பட்டது. எந்தவொரு பாரபட்சமும் இன்றி இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

இரு பிரிவைச் சேர்ந்த நோயாளிகளால் 80 வீதமானோர் இரண்டு அலலது மூன்று நாடிகளில் அடைப்பு உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். அதாவது, 80 வீதமானோர் கடுமையான இருதய நோய் உடையவர்களாகவும் (By Pass) சத்திரசிகிச்சைக்கு உட்பட வேண்டிய நிர்ப்பந்தம் உடையவர்களாகவும் இருந்தனா. 20 வீதமானவர்கள் ஒரு நாடியில் மட்டும் அடைப்பை உடையவர்களாக இருந்தனர். 95 வீதமானவர்கள் இந்த




மாலை நேரத்திலும் ஒரு நிமிடத்திற்கு 90 அடிகள் என்ற வீதத்தில் அரை மணித்தியாலம் நடக்கின்ற பயிற்சியைச் செய்யவேண்டும். இந்த நேரங்களில் தாவரங்களின் உணவுத் தொகுப்புக் கூடுதலாக நடைபெறுவதால், சூழலில் அதிகளவு ஒக்சிசன் காணப்படும். அவை எமக்கு அவசியமானவையாகும். இப்படி நடக்கின்ற உடற்பயிற்சி செய்யும்போது உடலில உள்ள நச்சுப் பதார்த்தங்கள் கழுவப்படுகின்றன. இரவில் சூழலில் காபனீரொட்சைட் ($Co_2$) என்ற வாயு கூடுதலாகக் காணப்படுவதால் இரவில் நடப்பது நல்லது அல்ல.

அஞ்சியோ கிரபி (Angiography) சோதனையானது இந்த ஆராய்ச்சிக்கு முன்பும், பின்பும் செய்யப்பட்டது. இந்த அஞ்சியோ கிரபி எவருடையது என்றோ அல்லது எது முதல் செய்யப்பட்டது என்றோ யாரும் அறியாத வகையில் ஓர் இலக்கமிடப்பட்டு செய்யப்பட்டன. இவை மூன்று சுதந்திரமான நிபுணர்களால் ஆரா நிகழ்ச்சித் திட்டத்தில் ஆர்வமாகக் கலந்துகொண்டனர்.

நோயாளிகளுக்கு இந்த முடியுரு நாடிகளில் ஏற்படுகின்ற அடைப்பான கடந்த 40 வருட காலமாகப் படிப்படியாக ஏற்பட்ட ஒன்று என்றும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தை 50 வீதம் மாத்திரம் பின்பற்றினால் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் கூறப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை 60 வீதம் மாத்திரம் பின்பற்றினால் 20 வீத முன்னேற்றமும், 70 வீதம் பின்பற்றினால் 40 வீத முன்னேற்றமும், 80 வீதம் பின்பற்றினால் 60 வீத முன்னேற்றமும், 90 வீதம் பின்பற்றினால் 80 வீத முன்னேற்றமும், 100 வீதம் பின்பற்றினால் 100 வீத முன்னேற்றமும் ஏற்படும் என நோயாளிகளுக்குக் கூறப்பட்டது.

இதில் பங்குபற்றிய சராசரி நோயாளிகள் 50-100m கூட நடக்க முடியாதவர்களாக இருந்தார்கள். ஆனால், இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றி 7 நாள்களுக்குள்ளேயே 1 Km அலலது 2Km தூரம் நடக்க முடிந்தது. ஒரு வருடத்தில் 3-5Km தூரம் நடக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். எந்தவித நெஞ்சுவலியோ, மூச்சுத் திணறலோ மேலதிக மருந்துகளோ இன்றி இதை அவர்களால் செய்ய முடிந்தது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அதாவது இராஜயோக தியானப் பயிற்சிக்கு உட்படாதவர்களிலும் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் அது மிகக் குறைவாகவே இருந்தது.

மருந்துகளைப் பொறுத்தவரை முதலாவது பிரிவைச் சேர்ந்த அதாவது, ஆரோக்கியமான வாழ்க்கை முறை, இராஜயோக தியானப் பயிற்சியைப் பின்பற்றியவர்கள் சராசரியாக 5.31 எண்ணிக்கையைக் கொண்ட மாத்திரைகளை எடுப்பவர்களாக இருந்தார்கள். 7 நாள்களில் அவர்களுக்குத் தேவையான மாத்திரைகளின் எண்ணிக்கை இரண்டிலும் குறைவாகக் காணப்பட்டது. ஒரு வருடத்தில் அது 1.41 ஆக மேலும் குறைந்தது.

ஆனால், இரண்டாவது பிரிவை அதாவது, கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குத் தேவையான மாத்திரைகளின் சராசரி எண்ணிக்கை 4.97 ஆக ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் பின்னர் அவர்கள் பயன்படுத்தும மாத்திரைகளின் அளவைக் குறைக்க முடியாது இருந்தோடு மேலும் கூடுதலான மாத்திரைகள் தேவைப்பட்டன.

இதயத்தில் இரத்தத்தைப் பாய்ச்சுகின்ற சக்தியானது 44 வீதத்தில் இருந்து 49 வீதமாக முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்களில் அதிகரித்திருந்தது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவை அதாவது, இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களில் இது குறைந்திருந்தது. ஆரோக்கியமான வாழ்க்கை முறை நிகழ்ச்சியை அதாவது, இராஜயோக தியானப் பயிற்சியைப் பின்பற்றிய முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரைகளை எல்லாம் மிக நன்றாகப் பின்பற்றினார்கள். உணவைப் பொறுத்தவரை 75 வீதத்திற்கு மேலாகக் கூறப்பட்ட உணவுகளை மாத்திரமே பயன்படுத்தினார்கள். உடற்பயிற்சியை 71வீதத்திற்கு மேலாகப் பின்பற்றினார்கள் ஆகவே, இவர்களின் கொலஸ்ரோல் மட்டமானது 228இல் இருந்து 172 ஆகக் குறைந் தது. அதாவது, ஏறத்தாழ 25வீத குறைவு காணப்பட்டது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் கொலஸ்ரோல் அதிகரித்திருந்தது.

**தொகுப்பு: தேவா**

முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்களின் மனது குளிர்மையாக இருந்தால், கொட்ட கொலஸ்ரோலின் அளவு 14வீதத்தில் குறைந்திருந்தது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களின் மனது சூடாக இருந்தால், கெட்ட கொலஸ்ரோல் அதிகரித்திருந்தது. முதலாவது பிரிவினரில் நல்ல கொலஸ்ரோல் 11வீதத்தால் அதிகரித்து இருந்தது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் இதில் எந்த மாற்றமும் இல்லை. அதேநேரத்தில் "ட்ரைகிளிச ரைட்" (Triglyceride) எனப்படுகின்ற கொழுப்பு 31வீதமாக முதலாவது பிரிவினரில் குறைந்திருந்தது.

இந்த முறை மூலம் ஒரே தடவையில் கொலஸ்திரோலின் அளவைக் கூட்டிக்கொள்வதோடு, கெட்ட கொலஸ்

**5**

ரோல், "ட்ரை கிளிசரைட்", என்பவற்றைக் குறைத்துக்கொள்ளலாம். இந்த ஆரோக்கிய வாழ்க்கை முறையை அதாவது, இராஜயோக தியானப் பயிற்சியைப் பின்பற்றியவர்களின் "A" வகையைச் சேர்ந்த நடத்தையில் கணிசமான அளவு குறைவு காணப்பட்டது. உணர்ச்சிவசப்படுவது, அவசரப்படுவது, மனத்தளர்வு, கோபம் போன்ற குணங்களில் பெருமளவு மாற்றம் காணப்பட்டது. அவை பெருமளவு குறைந்திருந்தது. ஆனால், கட்டுப்பாட்டுப்பிரிவைச் சேர்ந்தவர்களில் இந்தக் குணங்கள் இன்னும் அதிகரித்து இருந்தன. இந்தக் குணங்கள் இருதயநோய்க்கு நல்லது அல்ல என்று கூறப்பட்டபோதும் கூட இவை இவர்களில் அதிகரித்து இருந்தன.

ஒன்றை அறிந்திருப்பதற்கும், செய்வதற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. கோபம் கூடாது என்று அறிந்திருந்தாலும் நாம் கோபப்படுகின்றோம். ஏனென்றால், கோபப்படாமல் இருக்கின்ற சக்தி எம்மிடம் இல்லை. பொதுவாக உடல் நலனில் 36வீத முன்னேற்றம் முதலாவது பிரிவினரில் காணப்பட்டது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் உடல் நலம் இன்னும் மோசம் அடைந்து இருந்தது.

"அஞ்சியோகிரபி" சோதனையின்போது முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் 94வீதமானவர்களில் இருதய முடியுரு நாடிகளின் அடைபபுத் திறந்திருந்தது. ஆனால், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் 81வீதமானவர்களில் அடைப்பின் வீதம் அதிகரித்திருந்தது. இரண்டு பிரிவினரும் ஒரேமாதிரியான உணவு, உடற்பயிற்சி முறையைப் பின்பற்றியிருந்தபோதும், கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இராஜயோக தியானத்தின் மூலம் மன அழுத்தம், பதற்றத்தில் இருந்து விடுபடுகின்ற கலையைப் பயிற்சி செய்யாததால் அவர்களின் நாடிகளின் அடைப்பு மேலும் அதிகரித்ததில் இருந்து இந்த நோயைக் குணப்படுத்த அல்லது தடுப்பதற்கு மனதின் பங்கு மிகமிக முக்கியமான ஒன்றாகத் திகழ்கின்றது என்பது தெளிவாகின்றது.

*வளரும்*

# வேப்பிலை தரும் பயன்கள்...



**வே**ப்பிலை ஒரு கசப்பு சுவை கொண்ட மூலிகையாகும். சுவை என்பது காரம், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு, கசப்பு என ஆறு வகைகளைக் கொண்டது. இந்த ஒவ்வொரு சுவைக்கும் ஒரு தனித் தன்மை உண்டு. இருப்பினும், கசப்பு சுவைக்குரிய தன்மைகள் வித்தியாசமானவை.

இச்சுவையுடைய வேப்பிலையினைச் சாதாரணமாக மென்றுவிழுங்கலாம் அல்லது வெய்யிலில் உலர்த்திப் பொடியாக்கி நீரில் கலந்து குடிக்கலாம்.

வேப்பிலையைத் தண்ணீருடன் கலந்து கொதிக்க வைத்து கசாயமாகப் பருகலாம். அருந்தும் விதம் எதுவாக இருப்பினும் கசப்பு சுவை வயிற்றினுள் குடற்பகுதியில் சென்றதும் அங்கு வசிக்கும் நூல் புழு, கொக்கிப் புழு, நாடாப்புழு போன்றவை மடிந்து மலத்தின் மூலமாக வெளித் தள்ளப்படும். வயிற்றுப் பகுதியில் இருந்து குடல் உறிஞ்சிகளால் கசப்புச் சுவை உறிஞ்சப்பட்டு இரத்தத்தைச் சென்றடையும்போது இரத்தத்தில் இருக்கும் தேவையில்லாக் கிருமிகள் இறந்துபோகின்றன. அவை சிறுநீர் வழியாக வெளியேறுகின்றன.

குடற்பகுதியில் வசிக்கும் புழுக்கள் வெளியேறிவிடுவதால் நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் இருக்கும் முழு சக்தியும் உடலுக்குள் கிடைக்கும்.

இரத்தத்தில் உள்ள கிருமிகள் அழிந்து இரத்தம் தூய்மை அடைவதால் உடலில் வளர்சிதை மாற்றம் அதிகரிக்கின்றது.

**அம்மைநோய்க்கு...**

அம்மைநோய் வரக்காரணம் கிருமிகளே என்பது நிரூபணம். இக்கிருமிகளுக்கு வேப்பிலை ஒரு சிறந்த கிருமிநாசினி. எனவே, அம்மை கண்டவர்களைச் சுற்றி வேப்பிலைக் கொதத்துக்களைப் போடுவார்கள்.

அதன் காற்றுவாடையே கிருமிகளை அழிக்கும் சக்தி படைத்தவை.

மேலும் அம்மை கண்டவர்களின் உடலின் மீது வேப்பிலை அரைத்துப் பூசுவார்கள். இதனால் அம்மையினால் ஏற்பட்ட தழும்புகள் விரைவில் மறையும்.

வீட்டில் அழகு சேர்க்கும் பொருட்டுப் பலவித மரங்களை வளர்க்கும் பழக்கம் அனைவருக்கும் உண்டு. மற்றவகை மரங்கள் வளர்ப்பதைக் காட்டிலும் வேப்பமரங்களை வளர்ப்பதினால் தினமும் அந்த மரத்திலிருந்து கிடைக்கும் மருத்துவ குணம் நிறைந்த காற்றினைச் சுவாசிக்கலாம்.

இதனால் உடலில் ஏற்படவிருக்கும் பல நோய்களிலிருந்து மீண்டுவிடலாம் என்பது வெளிப்படை.

வேப்பிலையை உபயோகிப்பதால் ஆண்மைக்குறைவு ஏற்பட்டுவிடும் என்பதுமக்களிடையே நிலவிவரும் ஒரு கருத்து.

அது முற்றிலும் தவறான ஒரு கருத்தாகும்.

வேப்பமரப் பழங்களைப் பறவை இனங்களும், இலைகளை ஆடு, மாடுகளும் காலங்காலமாக உண்டு வருகின்றன. ஆனால், அவைகளின் இனவிருத்தி நடத்துகொண்டுதான் இருக்கின்றது. இதைக்கொண்டே அந்தப் பழைய கருத்து மயக்கம் தெளிவுபட்டுவருகிறது.

**பல் உபாதைகள் தீர்க்க...**

பற்களில் ஏற்படும் நோய்களான பல்வலி, பல் சொத்தை போன்றவைகளுக்கு வேப்பங்குச்சியினைக் கொண்டு தினமும் பல் துலக்கி வருதல் ஒரு சிறந்த மருத்துவமாகும். தொடர்ந்து ஓரிரு மாதங்கள் வேப்பங்குச்சியை உபயோகித்துப் பல் துலக்கிவந்தால் மேற்கண்ட பல் உபாதைகள் அறவே மறையும்.

வேப்ப எண்ணெய் நல்ல உபயோகமுள்ள ஒன்றாகும். மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படும் உடல் புண்களின் மேல் தடவுவதால் வெளிக் காற்றிலுள்ள கிருமிகள் புண்களின் மூலம் உடலுக்குள் புகாமல் பாதுகாக்கப்படுகின்றன.

சினையாகாத பசுக்களுக்கு வாரம் ஒருமுறை 200 மி.லீ. வேப்ப எண்ணெயினை உள்ளுக்குக் கொடுப்பதன் மூலம் கருத்தரிக்கும் வாய்ப்பு உள்ளது என்பது நிரூபணமாகும்.

தலைப்பொடுகு, தலையில் பூச்சிக்கடியால் சொட்டை விழுதல், பொடுகு போன்றவை நீங்க வாரம் ஒருமுறை வேப்பிலைப் பொடியை நீர்விட்டு பிசைந்து தலையில் தடவி சுமார் 2 மணி நேரம் ஊறவிட்டு பின்பு குளிப்பதால் தலைப்பொடுகு, பூச்சிக்கடி போன்றைவை நீங்கும்.

இதேபோல் தோல் நோய் உடையவர்கள் உடல் முழுவதும் பூசிக் குளித்து வருவதால் தோல் நோய்கள் அறவே ஒழியும். ✪

# மூளையையும் நரம்பினையும் தாக்கும் விசர்நாய்க்கடி நோய்...

**யாழ். குடாநாட்டில் தற்போது விசர்நாய்க்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதுதொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

**யாழ்.** குடாநாட்டில் விசர்நாய்க்கடி நோயினால் அண்மைக்காலமாக மரணம் அதிகரித்து வருவதனால் இந்நோய் பற்றி மக்கள் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

▲ மூளையையும், நரம்புத் தொகுதிகளையும் தாக்கும் இந்நோய் நூறுவீதம் மரணத்தை ஏற்படுததும்.

▲ சின்ன உருவமான ஒரு Rhabdo Virus (றப்டோ வைரஸ்) 4 நாள்களுக்குள் நோய் ஏற்படலாம்.

**அறிகுறிகள்:**

காய்ச்சல், குளிர், பலவீனம், களைப்பு, சோர்வு, தலைவலி, கண் கூச்சம், தசைநோவு, பரபரப்பு, மன விழ்ச்சி, சினத்தல், சுவாச, சமிபாட்டுத் தொகுதியில் தொற்றுக்குரிய குணாதிசயங்கள், நீர்வெறுப்பு, திடீரெனச் சுவாசப்பை தசை இறுக்கமடைதல், நீர்குடிக்க முயற்சிக்கும்போது சுவாசப்பை தசைகள் இறுக்கமடைதல், காற்றுப்படும்பொழுது மேற்கூறப்பட்ட திடீர் சுவாசப்பைத் தசைகள் இறுக்கமடைதல், கூடுதலாக உமிழ்நீர்சுரத்தல், கண்ணீர் சுரத்தல்.

**விலங்கு கடித்த பின் சிகிச்சை**

▲ கடிகாயத்தை உடனடியாக சவர்க்காரத்தினாலும் தண்ணீரில் கழுவுதல் பின் 70 வீத அலககோலினால் கழுவுதல்.

▲ ஏற்புவலி தடுப்பூசி தேவைப்படின் ஏற்றுதல்வேண்டும்.

▲ தேவைப்படும்பொழுது பற்றீரியா தொற்றைத் தடுப்பதற்கு (Antibiotic) மருந்துகொடுக்கப்படவேண்டும்

▲ கடித்த விலங்கு நீர்வெறுப்பு நோய் உடையதாக இருக்கலாம் எனச சந்தேகிக்கிக்கும் பொழுது தகுந்த சிகிச்சை.

**விசர்நாய்க் கடியிலிருந்து உங்களைக் காப்பதற்கான வழிவகைகள்**

▲ உங்களுக்குப் பழக்கமில்லா நாய்களையோ ஏனைய விலங்குகளையோ தொடாதீர்கள்.

▲ நாய்களுடன் செல்லமாய் விளையாடும்போது உங்கள் முகத்தை அவற்றின் முகத்துக்குக் கிட்டக்கொண்டு போகாதீர்கள்.

**டாக்டர் கே.இரத்தினசிங்கம்**
**சிரேஷ்ட மருத்துவர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை**

▲ வளர்ப்பதற்கென நாய்க்குட்டிகளை வேறு நபர்களிடம் இருந்து வாங்காதீர்கள். விசர்நாய்க்கடித் தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட நாய்களின் குட்டிகளையே வாங்குங்கள்.

▲ அந்நியரிடமிருந்து நாய்க்குட்டியை வாங்கினால் நாய்க்குட்டி விசர்நோயுடையதெனச் சந்தேகிக்கும் பட்சத்தில் ஒரு மாதகாலத்திற்கு அதைத் தனிமைப்படுத்தி வைத்திருங்கள்.



▲ மூர்க்கத்தனமான நாயை வைத்திருந்தால் கடிநாய் என்னும் எச்சரிக்கைப் பலகையைக் காட்சிக்கு வைத்திருங்கள்.

▲ கோபக் குணமுடைய நாய்களுக்கு வாய்பூட்டுப் போடுங்கள்.

▲ 5வாரத்துக்கு மேற்பட்ட நாய்களுக்கு வருடாவருடம் விசர்நாய்க் கடித் தடுப்பு மருந்தூட்டுங்கள்.

▲ வெய்யில் காலத்தில் ஆண் நாயையும் பெண்நாயையும் வெவ்வேறாகப் பிரித்து வைத்திருங்கள்.

▲ நாயகள் தேவையற்ற இனப்பெருக்கம் செய்வதைத் தடுப்பதற்கு உங்கள் பகுதியிலுள்ள விலங்கு வைத்தியரின் உதவியை நாடுங்கள்.

நீர் வெறுப்பு நோய் உடையதெனச் சந்தேகிக்கும் விலங்கை பாதுகாப்பாகத் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும் அல்லது உடனடியாகக் கொல்லவேண்டும் ஏனெனில், இந்த விலங்கு மற்றைய விலங்கு களுக்கும் கடித்து இந்நோயைப் பரப்பிவிடும். ★

# சத்தியசாயி சிறுவர் வித்தியாலய விழாவுக்கு வெளிநாட்டு அறிஞர்கள்

மானிப்பாய்,ஜுன்22

மானிப்பாய் சோதிவேம்படி வீதியிலுள்ள சத்திய சாயி வித்தியாலயத்தின் 2ஆவது ஆண்டு சிறுவர் விளையாட்டு விழா சாயி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30மணிக்கு இடம்பெறும். இதற்கு சாயி இணைப்புக்குழுத் தலைவர் எம். வன்னியசேகரம் தலைமை வகிப்பார்.

பாங்கொக் (தாய்லாந்து) சத்திய சாயி பல்கலைக்கழகத்தின் இயக்குநரும் விஞ்ஞானியும் தாய்லாந்து அரசின் முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஆட்ஓங்யும் சாய் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக பாங்கொக் சத்திய சாயி பல்கலைக்கழக விரிவுரையாளர் லொரேயின் பரோஸ் அம்மையார், ஆஸ்திரேலிய சத்தியசாயி நிறுவன இயக்குநர் டாக்டர் பால் டால், வலயக் கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் மற்றும் டாக்டர் தேஷீண்டான் மத்திய அறக்கட்டளை நிதிக்குழுத் தலைவர் வி.ரி.டி.ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். பொதுக்கூட்டமும் நடைபெறும். (ப)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கரத்தினம் இராசேந்திரம்

(பரிமளக்கா)

(ஓய்வு பெற்ற ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்)



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கரத்தினம் இராசேந்திரம் அவர்கள் 18.06.2004 வெள்ளிக்கிழமை காலை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா இராசேந்திரம (ஓய்வுபெற்ற அதிபர், நல்லூர், சி.சி.கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சபாரத்தினம்-வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற நாகமணி தம்பையா-ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் இரவீந்திரன் (கனடா), யமுனா, நரேந்திரன், சிவகுமார் (ஆஸ்திரேலியா), மகேந்திரன் (ஆஸ்திரேலியா), கங்கா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மஹாலஷமி (கனடா), பிஞ்ஞகன் செம்மல், சிவகுமார் (கனடா), குமாரிசந்திரா, இராஜமாலினி (ஆஸ்திரேலியா), அனுஷியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நாகரத்தினம், பாக்கியரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் பிரமிளா, மிதிலா (ஆஸ்திரேலியா), ஜினேஸ்குமார், வித்தியா, சேயோன் (கனடா) ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2004) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20,7ஆம் குறுக்குத் தெரு,*
*பொருப்பனை வீதி, இரத்மலானை.*

தகவல்:
மக்கள், மருமக்கள்.
T.P.-2605459

(C/35738)(43-11-16-32)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுன்22

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10-13)

★ ★ ★

யாழ்.வண்ணை நகர் ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★ ★ ★

கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10-15)

★ ★ ★

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-152)

### சத்திர சிகிச்சைக் கூடத்துக்குப் பொன்விழா

யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தின் 50 ஆண்டுகள் பூர்த்தி விழா நேற்று சத்திரசிகிசசைக் கூடத்தில் கொண்டாடப்பட்டது.

1954 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27 ஆம் திகதி சத்திரசிகிச்சைக் களத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

அப்போதைய சுகாதார அமைச்சா இ.எ.நுகவெல இதற்கான அடிக்கலை நாட்டியிருந்தார். விழாவை முன்னிட்டு சத்திர சிகிச்சை கூடத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளரின் தலைமையில் கூட்டம் நடைபெற்றதுடன் விருந்து பசாரமும் இடம்பெற்றது. (4-15)


## தொழிலாளர் தேவை

**உழவு இயந்திரச் சாரதி (Tractor Driver)**

5 வருட அனுபவமுள்ளவர்கள் உடன் நேரில் சமுகம் தரவும்.
தகுந்த வேதனம் வழங்கப்படும்.

யூரோவில்
(33361) (40) 866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## யாழ். மண்ணில் மாபெரும் கண்டிய நடனம்

இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ். மண்ணில் உலகப்புகழ் வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித்தனி விளக்கங்கள் தமிழில் விளங்கப்படுத்தி நடைபெறவுள்ளது.

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளது.

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம் : 2004.06.27 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 1.00 மணி.

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

★ அனுமதிக்கு முந்துங்கள்:-
T.K.ரூறிஸ்ற் இன், இல-200, அரசடி வீதி,
பலாலி வீதி ,கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 0212225680/0776209963.

(C/35736)(35-11-16-32)

கரும்புலிகள் நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தும்

## சிறுகதை, கவிதைப் போட்டிகள்

I சிறுகதை (பொதுவானது)
II கவிதை (பாடசாலை மாணவர்களுக்கானது)

**நிபந்தனைகள்:**

1) தேச விடுதலை உணர்வினை மையமாகக்கொண்டு ஆக்கங்கள் எழுதப்படல்வேண்டும்.
2) சிறுகதை 05-07 வரையான பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதை 20 தொடக்கம் 50 வரிக்குட்பட்டதாகவும் அமைதல் வேண்டும்.
3) பாடசாலை மாணவர்களின் படைப்புக்களை பாடசாலை-அதிபர்/வகுப்பாசிரியர் உறுதிப்படுத்தல் வேண்டும்.
4) ஆக்கங்கள் அனைத்தும் 01.07.2004இற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
5) வெற்றிபெற்றவர்களுக்கு சிறப்பு பரிசில்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் கரும்புலிகள் நாளன்று வழங்கப்படும்.

ஆக்கங்கள் நேரடியாகவோ, தபால்மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.
அனுப்ப வேண்டிய முகவரி:-

கரும்புலிகள் நாள் போட்டி,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(33362)(33-11-16-32) சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,

# உடனடி வேலை வாய்ப்பு

## தமிழீழத் தேசியத் துணைப்படை

## தமிழீழம்

தமிழீழத் தேசியத் துணைப்படைக்கு உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் முகமாக தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை : 18 தொடக்கம் 25 வரை

உடற் தகைமை : தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.

சம்பளம் : ரூபா 8500/= மாதமொன்றுக்கு

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்துக்கு எதிர்வரும் 23-06-2004 தொடக்கம் 30-06-2004 வரை சமுகம்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**குறிப்பு:** ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*பொறுப்பாளர், ஆளணிப்பிரிவு,*
*காவல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்.*

(சி-35741) (32-11-16)

# விபரீத விளையாட்டினால் சிறுவன் மருத்துவமனையில்

எறிந்து விளையாடிய கத்தி சிறுவனின் தலையில் தாக்கி காயப் படுத்திய சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவகுரு நாதன் பிரசாந்தன் (வயது7) என்ற சிறுவனே இந்தச் சம்பவத்தில் பாதிப் படைந்தான். தலையில் ஏற்பட்ட பாதிப் பால் கால்கள் செயலிழந்த நிலையில் இந்தச்சிறுவன் சாவகச்சேரி ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

இலை, தழை வெட்டிய போது கொக்கைச்சத்தகம் தலையில் வீழ்ந்ததி லேயே சிறுவன் காயமடைந்தான் என்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது தெரிவிக்கப்பட்டதாகவும்-

ஆனால். வைத்தியசாலையில் நடத்தப்பட்ட விசாரணைகளில் இரு சிறுவர்கள் கத்தியை எறிந்து விளை யாடிய போது இச்சிறுவனின் தலையில் கத்தி குத்தியமை தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது. (ஒ-117)

## பிரிவுபசாரம்

சாவகச்சேரி நகரசபை அலுவல கத்தில் கடமையாற்றி அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தி யோகத்தர்களுக்கு நகரசபை ஊழியா நலன்புரிச் சங்கத்தினர் நடத்தும் பிரிவுபசார விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நகரசபை பொது மண்டபத்தில் சங்கத் தலைவர் மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறும். (ஒ-117)

## மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்22

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நீரா வியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசை தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் யாழ்.பெரிய புலம் மகாவித்தியாலய மாணவர் களின் பேச்சு, திருவாசகம் ஓதுதல் மற்றும் கலந்துரையாடல் போன்ற நிகழ் வுகள் இடம்பெறும். (10-ரி)

★ ★ ★

அகில இலங்கைத் திருமுறை மன றத்தின் ஏற்பாட்டில் நாளை புதன் கிழமை காலை 9மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி ஆலயத்தில் இடம் பெறும் பூசையைத் தொடர்ந்து மாணிகக வாசகர் சுவாமிகள் குரு பூசையும் திருவாசகப்பாராயணம் மற்றும் சொற் பொழிவு ஆகியனவும் இடம்பெறவுள் ளன. (10-ரி)

★ ★ ★

வண்ணை நாவலர் மகாவித்தியால யத்தில் அமைந்துள்ள நாவலர் கோயி லில் நாளை புதன்கிழமை மாணிக்க வாசகர் குருபூசை நடைபெறவுள்ளது.

நாவலர் தர்மகர்த்தா சபையினின ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்தக் குரு பூசை நிகழ்வில் அபிஷேக ஆராத னைகள், கூட்டுப்பிரார்த்தனை என்ப னவும் பேச்சு, நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (4)

★ ★ ★

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின இந்து மன்றம் நடத்தும் மணிவாசகர் குருபூசை நாளை புதன்கிழமை காலை கல்லூரியில் உள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

விசேட பூசையைத் தொடர்ந்து ஆசி ரியர் இரா.செல்வவடிவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ஒ-9)

# சாரதிகள் நல்லொழுக்க வாரம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்22

மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்குகள் சமாதானம் தொடர்பான அமைச்சினால் நாடுமுழுவதும் நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை சாரதிகள் நல்லொழுக்க வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி சாவகச்சேரிப் பொலீஸ்நிலையப் பொலீஸார் பொது மக்களுக்கு வீதி ஒழுங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த விசேட செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள், ஓட்டோ, மினிபஸ் உட்பட்ட வாகனங்களின் சார திகள் ஆகியோருக்கு இவ்வாரத் தில் அறிவுரைகள், ஆலோசனைகள வழங்கப்படவுள்ளன. சாவகச்சேரிப் பொலஸ்நிலைய மோட்டார்ப் போக்கு வரத்துப் பிரிவு இதற்கான ஏற்பாட்டைச செய்துள்ளது.

வேகம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஆனால் காலனை வரவழைக்கும், குடிபோதையில் வாகனம் செலுத்து வதைத் தவிருங்கள், உயிரைப் பாது காக்கும் ஒருவராக மாறுங்கள் ஆகிய தொனிப் பொருள்களில் சுவரொட்டிக கண்காட்சி ஒன்று சாவகச்சேரி ட்றி பேக் கல்லூரி மாணவ மாணவியரின பங்களிப்போடு நாளை சாவகச்சேரியில் இடம்பெற உள்ளது. இதேவேளை வீதி ஒழுங்குகளை மீறுவோர் தொடர்பாக சட்ட விதிகள் கடுமையாகச் செயற் படுத்தப்பட உள்ளதாக சாவகச்சேரிப் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி அபேரத்ன தெரிவித்துள்ளார்.(ஒ-ரி)

## மோட்டார் சைக்கிள் மோதி மாணவி காயம்!

தென்மராட்சி,ஜுன்22

சாரதிகள் நல்லொழுக்க வாரம் ஆரம்பமான நேற்று சாவகச்சேரியில வீதியைக் கடந்த பாடசாலை மாணவி ஒருவர் மோட்டார் சைக்கிளில் மோதுண் டார்.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த ஏரன்ஸ்லாஸ் ஏஞ்ஜெலா (வயது 7) என்னும் மாணவியே காயமடைந்த வராவார். (ஒ-117)

# யூரியாவின் விலை குறைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ். மாவட்டத்தில் யூரியாவின் விலை கடந்த 10ஆம் திகதி முதல் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பதில் கமநல சேவை உதவி ஆணை யாளர் எஸ்.உருத்திரேஸ்வரன் தெரிவித் தார்.

இதுவரை காலமும் 50கிலோ யூரியாவின் விலை 950ரூபாவாக இருந்தது. இதன் விலை தற்போது 645ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் இந்த விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது. (ஒ-173)


## வாடகைக்கு

யாழ்ப்பாணம்/கஸ்தூரியார் வீதியில் இல. 82 இல் அமைந்துள்ள மேல் மாடியுடன் கடைக் கட்டடம் வாடகைக்கு உள்ளது.

(பாரத் ஸ்ருடியோ அருகில்)

தொடர்பு: R.லோகநாதன்,
இல. 27/7, வைமன் வீதி,
நல்லூர்.

(33370)(36-12-17)

## இந்திய பரம்பரை ஜோதிடர்




அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.மக்களின் விருப்பத்திற்கிணங்க
யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை , ஜாதகம் பார்க்கப்படும். உங்களின்
எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும்
உங்கள் வாழ்வில் வெற்றியும், சுபீட்சமும் அடையவும்
வியாழமாற்ற பலன்களை அறிந்துகொள்ளவும்
அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.
அம்மாவைச் சந்திக்கும் இடம் :
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(முன்பு இருந்த அதே பழைய இடம்)
ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.

(33368)(36-12-17)

## பதவி வெற்றிடம்

கொம்பியூட்டர் ஒப்பரேட்டர்
(I T Operator)

லயன் புறூவரி சிலோன் லிமிட்டட்டின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவல கத்திற்கு (ஆண்) கொம்பியூட்டர் ஒப்பரேட்டர் தேவை. வயது எல்லை 22-30.
கல்வித் தகைமை : G.C.E. A/L
MS Office

விரும்பியவர்கள் 25.06.2004 வெள்ளிக்கிழமை காலை 9.30-12.30 வரை கீழ்வரும் விலாசத்திற்கு நேரடியாக சமுகம் தரவும்.

The Lion Brewery Ceylon Ltd.
Pears Trader
99,Manipay Road, Jaffna.

(33366)(35-36-12-17)

## நாகம்ஸ் சுன்னாகம்



இன்று மட்டும் டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய். த்ரிஷா.
பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு:
11.00, 3.00, 7.00,10.00
நாளை முதல் ஆய்த எழுத்து

(C/35399)(12)

## ராஜா யாழ்ப்பாணம்



விக்ரம்,
ஜோதிகா
நடித்த
அருள்
காட்சி நேரம்:
10.30 2.30 6.30 (பு.நே.)



மீண்டும் அநேகரின்
வேண்டுகோளுக்கு
இணங்க 25 முதல்
கில்லி

(C/34517) (12)

## லக்சுமி இணுவில்



அஜித்,
சிநேகா,
ரகுவரன்,
வையாபுரி,
கருணாஸ் நடித்த
ஜனா
தினசரி: 11.00, 3.00, 7.00 புதிய நேரம்

(33326) (40)

ரவிச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன்
நாகேஷ் நடித்த
நான்
EXPOGURE [இரவு 8.45]

(C-35653)(12)

## TRTECH நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் நடத்தும் AAT கற்கைநெறி விரிவுரையாளர்களிற்கான விண்ணப்பம் கோரல்

தேசிய ரீதியில் அங்கீகாரமுடைய சான்றிதழ்களுடனான AAT கற்கை நெறிக்கு விரிவுரையாற்றுவதற்கு (English Medium) தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமையுடையவர்கள் எதிர்வரும் 26.06.2004 இற்கு முன்னர் நேரடியாக உரிய ஆவணங்களுடன் சமுகந்தரவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(35715)(36-12-17)


## கண்ணீர் அஞ்சலி




எமது கழக உறுப்பினர்
லயன் சி.சிவபாலசுப்பிரமணியம்
அவர்களின் பாசமிகு துணைவியார்
திருமதி வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்
(மாதகல் வடக்கு)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ்கழகம், சாவகச்சேரி.

(C-35746) (40-12-17-36)

## கண்ணீர் அஞ்சலி



திருக்குடும்ப கன்னியர் சபையின்
இளைப்பாறிய ஆசிரியை
அருட்சகோதரி மேரி சிறில்
அவர்கள்
20.06.2004 ஞாயிற்றுக்கிழமை
கர்த்தருக்குள நித்திரையடைந்தார்.
அவருக்கு கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்கி ஆத்மசாந்
திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

145/9, கதீற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.
☎ 222 7083

ம.அ.அருள்தாசன்
குடும்பத்தினர்.

(33365)(40-12-17-36)

## மரண அறிவித்தல்கள்

### சபாபதிப்பிள்ளை வைரமுத்து

(மலேரியாப்பகுதி - சுகாதாரத் திணைக்களம்)

சரவணை மேற்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட சபாபதிபபிள்ளை வைரமுத்து அவர்கள் நேற்று (21.06.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை விசாலாட்சி தம்பதிக ளின் அன்பு மகனும் காசிப்பிள்ளை - செல்லப்பாக்கியத்தின் அன்பு மருமகனும பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மலே சியாவைச் சேர்ந்த திரு.கணபதிப்பிள்ளை, கனகசுந்தரம், சுப்பிரமணியம், நாகம்மா, இரத்தினம்மா ஆகியோரின் சகோதரரும் பேரம்பலம் (எஞ்சினியர் ஆஸ்திரேலியா), மகாலட்சுமி, இந்திராணி, திரவியம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாமகள், சற்குணராசா (தபால் ஊழியர் - வட்டுக்கோட்டை), சோதிநாதன் (விநாயகமூர்த்தி அன் சன்ஸ், வவுனியா) ஆகியோரின் அன்புமாமனாரும் நவநீதன், ஜெயக்குமார், கார்த்திகா, ராகுலன ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2004) செவ்வாய்க்கிழமை 2.00 மணியளவில் கொத்தத்துறை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சற்குணராசா குடும்பத்தினர்
வட்டுக்கோட்டை.

சரவணை மேற்கு,
வட்டுக்கோட்டை.

(C/35742)(43-12-17-36)

### திருமதி பொன்னையா பாக்கியம்

உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா பாக்கியம் அவர்கள் 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளியம்மை அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் வடிவேலு பவளம் என்பவரின் அன்புச் சகோதரியும் பூபால சிங்கம், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் செல்வராசா, மல்லிகா தேவி, அம்பிகாதேவி, தங்கராஜா (மக்கள் வங்கி - அச்சுவேலி), நடராஜா (சிறி - இத்தாலி), சாரதாதேவி (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, நடராசா (முன்னாள் வீதி மேற்பார்வையாளர்), பொன்மணி, தயாரூபி, ஜெயந்தி (இத்தாலி), தயகுமார் (U.K.) ஆகியோரின அன்பு மாமியாரும் அபிமன் (விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்) றோகினி, விஜயேந்திரா, சிவதர்சினி (பிரான்ஸ்), ராஜேந்திரா (பிரான்ஸ்), பத்மேந்திரா, மதிவதனி, றமேஸ், சுரேஸ், றமேக்கா, தனுஷன், திலக்ஷன், சோபிகா, மயூரன், கஜீபன், கௌதமன், பிரவீனன், கஜானன், ஜனகன், விதுஷன், சாருஜன் ஆகியோரின் பேர்த்தியும் அனஸ்ரிக்கா, அக்ஷயன் ஆகியோரின் பூட்டியுமாவார்

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை 23.06.2004 புதன்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருளன் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கராஜா (மகன்).

உரும்பிராய்வடக்கு,
உரும்பிராய்.

(33372)(36-17-12)

# 114 எம்.பிக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, மகிந்த சமரசிங்க, எம்.எஸ்.செல்லச்சாமி, பெ.சந்திரசேகரன், வண.அத்துரலியே ரத்னசார தேரர், மா.க.ஈழவேந்தன் போன்றோர் பங்குபற்றினர்.

சபாநாயகரிடம் மகஜரைக் கையளித்த பின் எதிர்க்கட்சிகள் கூட்டாகச் செய்தியாளர் மாநாட்டையும் நடத்தினர்.

ஐதேக. பிரதித்தலைவர் கரு ஜயசூரிய, மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன், இ.தொ.கா. செல்லச்சாமி, ஜாதிக ஹெல உறுமய அத்துரெலிய ரத்னசார தேரர், ஸ்ரீல.மு.கா.ரவூப் ஹக்கீம், தமிழர் தேசியக் கூட்டணி ஈழவேந்தன் ஆகியோர் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினர்.

மாறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய நாங்கள் இப்பொழுது ஐக்கியத்துடன் செயல்பட ஆரம்பித்து விட்டோம். இது அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்குடனோ அல்லது புதிதாக கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற நோக்கத்துடனோ ஏற்பட்ட ஐக்கியம் அல்ல.

ஆளும் கட்சியினரால் சீரழிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காக்கவும், அவர்களுடைய அரசியல் பயங்கரவாதத்தையும், காடைத்தனத்தையும் ஒழிக்க வேண்டும் என்ற பரந்த நோக்குடனேயே ஒன்றுபட்டுள்ளோம்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குழப்பம் விளைவித்தால் அதனைச் சகித்துக் கொள்ளலாம். ஆனால், ஆளும் கட்சியினரே குழப்பியடித்தால் அதனை மன்னிக்க முடியாது - என்றனர்.

வணக்கத்திற்குரிய பௌத்த பிக்குமாரையே அதி உயர் நாடாளுமன்றத்தில் வைத்தே தாக்குகின்றனர் என்றால், மாற்றுக்கருத்துள்ள சிறுபான்மை உறுப்பினர்கள் எப்படி இந்தச் சபைக்கு வரமுடியும்?

சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை என்றால், நாட்டில் எமது மக்கள் எப்படி சுதந்திரமாக நடமாட முடியும்? ஆளும் கட்சியினரின் கொடுங்கோல் ஆட்சியைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது - என சிறுபான்மை இனக் கட்சிப் பிரதிநிதிகள் கூறினர்.

கடந்த மூன்று மாதங்களில் ஆகக் குறைந்தது 30 நாள்கள் நாடாளுமன்றம் கூடியிருக்கவேண்டும் ஆனால் ஜனாதிபதியும் அவரது அரசும் நாடாளுமன்றத்தையே முடக்கி வைத்துவிட்டனர். நாடாளுமன்ற சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது. நாடாளுமன்றத்தில் அரசியல் காடைத்தனத்திற்கும், அடாவடித்தனங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதையே நாங்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளோம் - என எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறினர்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாகவும் விமானப்படைத் தளபதி கூறினார்.

விமான நிலையச் சீரமைப்புக்கு 50 கோடி ரூபா செலவாகும் என இந்திய மதிப்பீடுகள் தெரிவித்திருந்ததாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடத்திய ஆய்வுகளின்படி 28 கோடி ரூபா செலவில் விமான நிலைய மேற்பரப்பைத் திருத்துவதுடன் மின்னொளி அமைப்புக்களையும சீரமைக்கமுடியும் என தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(ப)

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாம். அவர்களுக்கு மாதச் சம்பளமாக 8 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என்றும் - காவல்துறையின் ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்திருக்கின்றார். (ஐ-3)

## கருணா தப்பிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார் என்றும் அவர் கூறினார்.

"கருணா தரப்பினருடனான மோதலைத் தடுப்பதற்காக அவரை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு உதவுமாறு விடுதலைப் புலிகள் தம்மிடம் கேட்டுக்கொண்டதனாலேயே தான் அவருக்கு உதவிசெய்தேன்"என்றார் அவர்.

கருணா தனது சிறுபராய நண்பர் என்ற தகவலையும் அலிஸாஹிர் மௌலானா அப்போது வெளியிட்டார்.

கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்கு வருவதற்கு கருணா தன்னிடம் உதவி கேட்டார் என்று தெரிவித்துள்ள அலிஸாஹிர் எம்.பி. அதன்பின்னர் தனக்கும் அவருக்குமிடையில் எந்தவிதமான உறவும் இல்லை என்று தெரிவித்தார்.

கருணாவின் வெளியேற்றத்தில் இலங்கை இராணுவத்தினருக்கு எத்தகைய பங்கு இருந்தது என்ற விடயத்தை அலிஸாஹிர் தெரிவிக்கவில்லை. ஆனால் முக்கிய அரசியல்வாதி ஒருவர் பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாது போட்டிக்குழுத் தலைவர் ஒருவரை தலைநகருக்கு கொண்டு சென்றார் என்று கூறுவதை ஏற்றுக்கொள்வது கடினம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

## ஐ.நா.பொதுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்காக ஒக்லாந்தில் வருடந்தோறும் மத்திய தர பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொள்ளும் மாதிரி ஐ.நா.பொதுச்சபைக்கூட்டம் நடத்தப்படுவது வழக்கம். இந்தக் கூட்டங்களுக்கு நியூஸிலாந்து நாடாளுமன்ற சபாநாயகரே தலைமை வகிப்பார். மாணவர்களை சர்வதேச விவகாரங்களில் அக்கறை கொள்ளச் செய்வதற்காகவே இவ்வாறு செய்யப்படுகின்றது. இம்முறை மாநாட்டுக்கு நியூஸிலாந்து நாடாளுமன்ற சபாநாயகர் ஜொனதன் ஹண்ட் தலைமை வகித்தார்.

ஒக்லண்ட் மகளிர் கிறமர் பாடசாலையில் இம்மாதம் 18ஆம், 19ஆம் திகதிகளில் மாதிரி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட மவுண்ட் றொஸ்கில் பாடசாலையின் மூன்று மாணவர்கள் விடுதலைப் புலிகளின் சீருடையில் புலிகளின் தேசியக்கொடியுடன் வந்திருந்தனர். இவர்கள் ஸ்ரீலங்காவின் தரப்பில் கலந்து கொள்ளமுடியாது என்று கூறி ஒரு பாடசாலையின் பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்தனர். இதனை தலைவரும் ஏனைய பிரதிநிதிகளும் உடனடியாக நிராகரித்து விட்டனர். ஒக்லண்ட் பிராந்தியத்திலிருந்து 40 பாடசாலைகளின் மாணவர்கள் ஏனைய 84 நாடுகளின் பிரதிநிதிகளாகக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். சபையில் ஸ்ரீலங்கா பிரதிநிதிகளாக மவுண்ட் றொஸ்கில் கிறமர் பாடசாலையின் மூன்று மாணவர்கள் கலந்துகொண்டனர். திப்ரா ராய், நிருப்பா ஜோர்ஜ் மற்றும் சிவா கோபாலன் ஆகியவர்களே அந்த மூவரும். சபை கூடியவுடனேயே எகிப்து, தாய். ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவம் செய்த மாணவர்களிடமிருந்து எதிர்ப்புக்கிளம்பியது. இவர்கள் அநேகமாக இலங்கை வம்சாவளியினராய் இருக்க வேண்டும். இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்ய இவர்களுக்குத் தகுதியில்லை என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், ஏனைய நாடுகள் அக்கறை காட்டிக்கொள்ளாததுடன் தலைவராலும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. போரினால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து இலங்கைப் பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

ஐநாவின் முன்னுள்ள பல உலகப் பிரச்சினைகள் இந்த மாணவர் மாநாட்டில் முனைப்புடன் விவாதிக்கப்பட்டன.

மாநாட்டின் இறுதி நிகழ்வில் நியூஸிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க் கலந்துகொண்டு நியூஸிலாந்தின் உலக விவகாரங்கள் தொடர்பான நிலைப்பாட்டை விளக்கினார். பரிசுகளையும் அவர் விநியோகித்தார். இலங்கைக்குழுவுக்கு சிறந்த மகிழ்வூட்டும் பேச்சாளருக்குரிய விருது வழங்கப்பட்டது. (ப)

# இராணுவப் புலனாய்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகலில் நாங்கள் தேநீர் அருந்தினோம். பின்னர், அங்கிருந்து கொழும்பு ஹில்டன் ஹோட்டலுக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கு நான்கு நாள்கள் தங்கியிருந்தோம்.

அப்போது டக்ளஸ் தேவானந்தா தொலைபேசி மூலம் கருணாவுடன் தொடர்புகொண்டு பேசினார். தன்னுடன் சேர்ந்து இயங்குமாறு அவர் கேட்டார். ஆனால், அதற்கு மறுப்புத் தெரிவித்த கருணா தான் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கப் போகிறார் எனத் தெரிவித்தார். ஆரம்பத்தில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கவே கருணா திட்டமிட்டிருந்தார்.

ஏப்ரல் 12ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை நாங்கள் ஹில்டன் ஹோட்டலில் தங்கியிருந்தோம். பின்னர் அங்கிருந்து மற்றொரு வீட்டுக்குச் சென்றோம் அந்த வீட்டில் கருணாவின் மனைவி, மூன்று பிள்ளைகள், கருணாவின் மொழிபெயர்ப்பாளர் வரதன் மற்றும் சில போராளிகள் தங்கியிருந்தனர். அங்கு நாங்கள் ஐந்தாறு நாள்கள் தங்கியிருந்தபின், அப்பலோ வைத்தியசாலைக்கு அண்மையில் நுகேகொடவிலுள்ள ஒரு வீட்டுக்கு மாற்றப்பட்டோம். அங்கு எமக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்பை அளித்தனர்.

நாங்கள் எங்களை வீட்டுக்கு, எங்கள் பெற்றோரிடம் அனுப்புமாறு கருணாவிடம் கோரினோம். அதற்குப் பதிலாக அவர் சவுதிஅரேபியாவுக்கு எம்மை அனுப்பலாம் எனவும் அங்கு வீட்டுப்பணிப்பெண்ணாக நாம் வேலை செய்யலாம் எனவும் கூறினார்.

அவரின் போக்கு எங்களுக்குப் பிடிக்கவில்லை..

கொழும்பில் அவருடன் இருந்த சமயத்தில் அறை ஒன்றுக்குள் பூட்டி எம்மை முடக்கி வைத்திருந்தனர். எனினும், கருணாவின் மனைவியுடன சேர்ந்து சமைக்கவும், தொலைக்காட்சி பார்க்கவும் நாம் அனுமதிக்கப்பட்டோம்.

இலங்கை இராணுவத்தின் பெரிய படைப்பிரிவு கருணாவுக்குப் பாதுகாப்பு வழங்கவில்லை. ஆனால், இலங்கை இராணுவத்தின் ஒரு பிரிவு - பெரும்பாலும் புலனாய்வுப் பிரிவு பாதுகாப்பு வழங்கியதென்பதை நாம் உறுதிப்படக் கூறுகின்றோம். அவர்கள் கனரக ஆயுதங்களுடன் பெரிய 'குறூப்' ஆக வரவில்லை. சீருடையுடனும் வரவில்லை. சாதாரண உடையில் ஆயுதங்களுடன் அவர்கள் பாதுகாப்பு வழங்கினார்கள்.

அடிக்கடி கருணா எம்முடன் தொடர்புகொண்டு பேசுவார். கடந்த 13 ஆம் திகதி நாமிருந்த வீட்டுக்கு வந்த கருணா, தான் வெளிநாடு செல்லப் போகிறார் என்றும் ஐந்தாறு மாதங்களில் திரும்பி வந்து கட்சி ஒன்றை ஆரம்பிக்கப் போகிறார் என்றும், அதுவரை எம்மைக் காத்திருக்குமாறும் கூறினார்.

பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் பாதுகாப்புடன் ஒரு காரில் ஏறிச் சென்றுவிட்டார். அவருடன் அவரது மனைவி, பிள்ளைகளும் சென்றனர். அவர்கள் எங்கு சென்றார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. வெளிநாடு செல்வதாக மட்டுமே எங்களிடம் சொன்னார்கள்.

அதன்பின்னர் அப்பலோ வைத்தியசாலை அருகிலிருந்த நாங்கள் ஒருவாறு தப்பி வெளியேறி விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கொண்டோம்.

இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றவர்கள் எவருமே அவருடன் இப்போது இல்லை. தேசியத் தலைவரின் சிறப்புப் படையினர் நடத்திய தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமலேயே அவர் மட்டக்களப்பிலிருந்து ஓடவேண்டி ஏற்பட்டது.

நாங்கள் அங்கு தங்கியிருந்த காலத்தில் அரசியல்வாதிகள் எவரும் எம்முடன் தொடர்புகொள்ளவில்லை. அரச உயர் அதிகாரி ஒருவர் மட்டும் எம்முடன் தொடர்புகொண்டு பேசினார் அவர் யார் என எமக்குத் தெரியாது.

கருணாவின் தவறால் இயக்கத்தை விட்டு விலக்கிப்போன போராளிகள் மீண்டும் இயக்கத்தில் இணைந்து கொள்ள வேண்டும். தலைமைக்கு விசுவாசமாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு தேசிய விடுதலையை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் - இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நால்வரும் அவர்கள் விட்ட தவறு காரணமாக இயக்கத்தில் பதவி நிலை இறக்கப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது (க)

## கொட்டடிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீன் முகமட் அமனுல்லா என்பவருடன் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்று ஆஜரானார்.

யாழ்ப்பாணத்தில் நடைபாதை வியாபாரம் செய்வதற்காக கடந்த 6 மாத காலத்துக்கு முன் இங்கு வந்தார் என்றும் -

அதன்பின் அடிக்கடி ஏ-9 பாதை ஊடாக கொழும்பு சென்று திரும்பிய போது கஞ்சாவை எடுத்துவந்ததாகவும் குறிப்பிட்ட நபர் - விசாரணையில் தெரிவித்திருக்கிறார்.

இதையடுத்து பிரஸ்தாப நபர் மீது இன்று வழக்குப் பத்திரம் தாக்கல் செய்யும்படி யாழ். பொலீஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், பிரஸ்தாப பெண்ணை 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். எனினும், பிணை செலுத்தாத காரணத்தால், இன்றுவரை அவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நாவலர்வீதிக்கு அண்மையில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 3 1/2 பரப்பு வெறும்காணி விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் மாலை 6 மணிக்குப்பின்.

தொடர்பு: மே/பா-S.மகேந்திரன், (மாஸ்ரர்) 284.இராசாவின்தோட்ட வீதிக்கு அருகில் (33360) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**நாளை ஆரம்பம்**

புதன் 3மணிக்கு

யாழ். மாவட்ட

முன்னணி ஆசிரியர்:

திரு. B.ரவீந்திரன்

**இணைந்த கணிதம்**

சயன்ஸ் அக்கடமி

(33237) நெல்லியடி.

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

இல. 7 சிவப்பிரகாசம் வீதி, ஐயனார் கோயிலடியில் 3 1/2 பரப்புக் காணியில் மூன்று அறை, மண்டபத்துடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:

கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

இல.43, கல்லூரி வீதி,

யாழ்ப்பாணம். T.P.222 5102

(யாழ் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அண்மையில்)

(சி-35743)

**NEW SCIENCE COLLEGE JAFFNA**

பௌதிகவியல்

அலகுரீதியான மீட்டல்

MON.-FRI. 7.00-8.00 (a.m.)

(பரீட்சை எழுதிய மாணவர்களுக்கானது)

By. கருணாநிதி B.Sc.(Spl.)

ஆரம்பம்: 23.06.2004

பிரிவு II SAT., SUN. 6.00-8.00 (a.m.)

ஆரம்பம்: 25.06.2004

(சி-33371)

**NEW SCIENCE CENTER**

-யாழ். நகர்-

CHEMISTRY DAY CLASS

- சகல அலகுகளுக்கும் துரித மீட்டல்.
- அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
- மாதிரி வினாக்கள்.
- கடந்தகால பரீட்சை வினாக்கள்.
- 20இற்கு மேற்பட்ட கருத்தரங்குகள்.
- வார நாள்கள் முழுவதும்.
- 8.00 a.m. - 9.30 a.m.

(சி-33116)

BY: அன்பழகன்

**தவறி விட்டது**

இருபாலையைச் சேர்ந்த P.வரதராஜன் என்பவருடைய 143 தொடர் இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் புத்தகம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பனவும் மல்லாகத்தைச் சேர்ந்த கந்தையா ஜெயபாலரட்ணம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் புத்தகம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்களும் திருநெல்வேலிச்சந்திக்கும், பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

ஹொட்டல் ஜொலி,

பலாலி வீதி

(திருநெல்வேலிச்சந்தி),

யாழ்ப்பாணம். (33357)(17)

**A/L தமிழ்-2004-DAY மீட்டல், Paper**

பிரத்தியேகப்பிரிவு

திரு: நாக. தமிழேந்திரன்

ஆரம்பம்: 23.06.2004 - புதன் 3p.m.

இடம் : TEMPLE ROAD . GREEN PARK முன்னால்

★ 2006 புதிய பிரிவு ஆரம்பம்

(33374)

**(C.I.S.R.S)**

**கருத்தரங்கு**

தலைப்பு: "எமது சமூகத்தில் உள்ள குற்றவியல் சம்பவங்களும், அதற்கான தீர்வுகளும்"

தலைமை: திரு. N.A.விமலேந்திரன்.

(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.)

ஆசியுரை: பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்

(தென்னிந்திய திருச்சபை, யாழ். ஆதீனம்)

கருத்துரை வழங்குபவர்:

பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி)

(வாழ்நாள் பேராசிரியர், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு.

(யாழ். வைத்தியசாலை முன்பாக)

காலம்: 22 ஜூன் 2004. பி.ப 4.00 மணி (செவ்வாய்)

நன்றியுரை: வண.G.நடராஜா.

(இயக்குநர் C.I.S.R.S)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண.G.நடராஜா.

இயக்குநர்,

C.I.S.R.S (33324) (43-12-17-33)

**CATWAS. COM**

**Computer Academy**

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான II ஆம் பிரிவுக்கான முடிவுத் திகதி 27-06-2004 என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுவதோடு இதற்கான அனுமதிகள் இன்னும் சொற்பமே உள்ளன என்பதையும் அறியத் தருகின்றோம்.

III ஆம் பிரிவு 07-07-2004 அன்று ஆரம்பமாகும்.

**Diploma Course**

1. Ms Office - 1750/-
2. D.T.P. - 2000/-
3. Hardware - 1500/-
4. Web page - 3000/-
5. Video Mixing - 2500/-

★ Ms Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் அனுமதிக் கட்டணம் இலவசம்.

★ Ms Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் Internet and E-mail இலவசமாகக் கற்பிக்கப்படும்.

★ அரச ஊழியருக்கான மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பம்.

**Certificate Course**

Word XP, Excel XP, Access XP, Power point XP, Pagemaker 7, Corel Draw 11, Photoshop 7, Cool 3D, Visual Basic, Premier, Studio 8.

விண்ணப்பங்கள் யாவும் உரிய நாள்களுக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ ஏற்றுக்கொள்ளப்படும்.

26, Somasundram Avenue, Chundikuli, Jaffna. T.P.:021-222 3805.

(சி-35713)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துப் போட்டியில் போர்த்துக்கல், கிறீஸ் அணிகள் கால் இறுதிக்குத் தகுதி

லிஸ்பன்,ஜூன்22

ஐரோப்பியக் கிண்ணக் காறபந்துப் போட்டியில் போர்த்துக்கல் அணி கால் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

கடைசி லீக் ஆட்டத்தில் வெற்றி பெற்றால்தான் கால் இறுதிக்குத் தகுதி பெறமுடியும் என்ற கட்டாயம் போர்த்துக்கல் அணிக்கு இருந்தது. அதற்கு ஏற்றவாறு அந்த அணி வீரர்கள் சிறப்பாக ஆடினார்கள். ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணி கோல் அடித்தது. பதில் ஆட்டக்காரரான நோகோமஸ் இந்தக் கோலை அடித்தார். பதிலுக்கு ஸ்பெயின் வீரர்கள் போராடினார்கள். ஆனால, அவர்களால் முடியவில்லை.



இறுதியில் போர்த்துக்கல் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் அந்த அணி கால் இறுதிக்குத் தகுதிபெற்றது. போர்த்துக்கல் ஏற்கனவே 2-0 என்ற கணக்கில் ரஷ்யாவை வென்று இருநதது. 1-2 என்ற கணக்கில் கிறீஸிடம் தோற்று இருந்தது.

ஸ்பெயின் முதல் ஆட்டத்தில் ரஷியாவை 1-0 என்ற கணக்கில் வென்றிருந்தது. கிறீஸுடன் 1-1 என்ற கணக்கில் சமன் செய்திருந்தது.

மற்றொரு ஆட்டத்தில் ரஷ்யா - கிறீஸ் அணிகள் மோதின. முதல் இரண்டு ஆட்டங்களில் தோற்றதால் இதில் வென்றாலும் கால் இறுதிக்குத்தகுதி பெறமுடியாத நிலை ரஷ்யாவுக்கு இருந்தது.

யாருமே எதிர்பார்க்காத வகையில ரஷ்யா 2-1 என்ற கோல் கணக்கில் கிறீஸை அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்தது. ரஷ்ய அணியில் கிரி சென்கோ 2 ஆவது நிமிடத்திலும், பல்சின் 17ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். கிறீஸ் அணியில் ரிஜாஸ 43ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

ரஷ்யாவிடம் தோற்றாலும் கோல்கள் அடிப்படையில் கிறீஸ் கால் இறுதிக்குத் தகுதிபெற்றது. முதல் முறையாக ஐரோப்பியக் கிண்ணப் போட்டியில் கால் இறுதிக்குத் தகுதி பெற்று கிறீஸ் புதிய வரலாறு படைத்துள்ளது.

முடிவில் 'ஏ' பிரிவில் போர்த்துக்கல் 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று முதல் இடத்தைப் பிடித்தது. கிறீஸ், ஸ்பெயின் அணிகள் ஒரு வெற்றி, ஒரு சமன், ஒருதோல்வியுடன் தலா 4 புள்ளிகள் பெற்றன. கோல்கள் அடிப்படையில் கிறீஸ் 3 ஆவது இடத்தைப பிடித்தது. அந்த அணி 4 கோல்கள் போட்டு இருந்தது. ஸ்பெயின் 2 கோல்கள் தான் போட்டு இருந்தது.

முதல் இரண்டு இடங்களைப் பிடித்த போர்த்துக்கல், கிறீஸ் ஆகிய அணிகள் கால் இறுதிக்குத் தகுதி பெற்றன. 32ஆவது இடத்தைப் பிடித்த ஸ்பெயின் 4ஆவது இடத்தைப் பிடித்த ரஷ்யா (ஒரு வெற்றி 2 தோல்வியுடன் 3 புள்ளி) ஆகிய அணிகள் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டன. (10)

## அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்22

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சஙகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் கலப்பு வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் யுத்கார்மல் அணியும் அரியாலை விளையாட்டுக்கழக அணியும் வெற்றியீட்டியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்பலகலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில் யாழ்பல்கலைக்கழக அணியை எதிர்த்து யுத்கார்மல் அணியும் பல்கலைக் கழக உடற்கல்வி அலகு அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டுக் கழக அணியும் மோதின. (-10-190)

### கிளிநொச்சி வலய

## பாடசாலை அணிகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஜூன்22

கிளிநொச்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையில் முதன்முறையாகக் கடந்த 17 ஆம் திகதி சதுரங்கப போட்டிகள் நடைபெற்றன.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்ற இப்போட்டிகளில் சுமார் 25 பாடசாலைகள் கலந்துகொண்டன.

இவற்றில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளின விவரங்கள் வருமாறு:-

★ 19 வயது ஆண்கள்:

முதலாமிடம்: கிளிநொச்சி மத்திய கல்லூரி, இரண்டாமிடம் - வட்டக்கச்சி மகா வித்தியாலயம்

★ 19 வயது பெண்கள்

முதலாமிடம் - வட்டக்கச்சி - மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

★ 15 வயது ஆண்கள்

முதலாமிடம் - வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்

★ 15 வயது பெண்கள்

முதலாமிடம் - வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

இந்த அணிகள் அடுத்தமாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. (10-190)

## விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் லண்டனில் நேற்று ஆரம்பம்

டென்னிஸ் வீரர்களின் மெக்கா என அழைக்கப்படும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் லண்டனில் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இரண்டு வாரங்கள் நடைபெறும் இப்போட்டிகளில் அமெரிக்காவின் அகஸி மற்றும் குயர்டன் காஸ்டன் காடியோ உட்படப் பல முன்னணி வீரர்கள் காயம் காரணமாக விலகியுள்ளனர்.

இந்நிலையில் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தவரும் உலகின் முதல் நிலை வீரருமான ரோஜர் ஃபெடரர், அமெரிக்காவின் ஆண்டி ராடிக் ஆகியோருககே பட்டம் வெல்லும் வாய்ப்பு அதிகம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே நான்தான் இம்முறை பட்டம் வெல்வேன் என அடம் பிடிக்கிறார் பிரிட்டன் வீரர் டிம் ஹெறனமேன். விம்பிள்டன் போட்டிகள் முதல் இந்த ஆண்டு நடைபெறும் போட்டிகளில் எனக்குப் பிரகாசமான வெற்றி வாய்ப்பு உள்ளது என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (10)

# ஆசியக் கிண்ணப் போட்டிக்கான இந்திய உத்தேச அணி அறிவிப்பு

பெங்களூர்,ஜூன்22

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான 20 பேர் கொண்ட இந்திய உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் 24 பேரைத் தேர்ந்தெடுத்து பெங்களூரில் கடந்த ஒரு வாரகாலமாக உடற்தகுதிப் பயிற்சிமுகாமில் ஈடுபடுத்தியிருந்தது.

அவர்களில் டெஸ்ட் தொடக்க வீரர் ஆகாஷ் சோப்ரா, சுழலபந்து வீசாளர் சாய்ராஜ் பஹதுலே கௌதம் காம்பீர், வேகப்பந்து வீச்சாளர் முனாஃப் படேல் ஆகிய நால்வர் மட்டும் நீக்கப்பட்டுள்ளனர் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியச் செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்துள்ளார்.


தேர்வு செய்யப்பட்டுள்ள வீரர்களுககான இறுதிக் கட்டப்பயிற்சி முகாம் சென்னையில் ஜூலை 3 முதல் 8 வரை நடைபெறவுள்ளது. 7ஆம் திகதி அணி அறிவிக்கப்படவுள்ளது.

கங்குலி, சேவாக், டிராவிட், டெண்டுல்கர், லஷ்மன், யுவராஜ் சிங், கைஃப், பார்த்திவ்பட்டேல், கும்ளே, ஹர்பஜன்சிங், முரளிகார்த்திக், ரமேஷ் பவார், ஹேமங்பதானி, ஸஹீர்கான, அஷிஷ் நெஹ்ரா, அகார்கர், இர்ஃபான்பதான், எல்.பாலாஜி, அமித் பண்டாரி, ரோஹான் கவாஸ்கர் ஆகியோர் உத்தேச அணியில் இடம்பெற்றுள்ளனர். (10)

## ஆஸ்திரேலிய அணியுடனான போட்டிகள் முத்தையா முரளிதரனுக்கு அர்ப்பணம்

கொழும்பு,ஜூன்22

ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டு போட்டிகளையும் முரளிதரனுக்கு அர்ப்பணிக்கின்றோம் என்று இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.




இத்தொடரில் முரளிதரன் கலந்து கொள்ளாவிட்டாலும்கூட எம்மால் ஆஸ்திரேலியாவில் சாதிக்கமுடியும். அதன் காரணமாகவே முரளிக்கு இரண்டு போட்டிகளையும் அர்ப்பணிக்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரையும் இரண்டாவது போட்டி 9 ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரையும் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. இந்த அணியில் சிறிதுகால இடைவெளிக்குப் பின்னர் விக்கெட்காப்பாளர் றொமேஸ் களுவிதாரணவும் இடம்பெற்றுள்ளார்.(10)

ஆஸ்திரேலியாவுக்குப் புறப்படு முன்னர் ஆசிபெறும் ஜனத் ஜயசூரிய



# கே.சி.சி.சி. கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஸ்ரான்லி, சென்றலைட்ஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்22

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்துக்கும் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிராஸ கொப்பர்ஸ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பில் ரி.வசந்தன் 26 ஓட்டங்களையும் ரி.மயூரன் 19ஓட்டங்களையும், பி.கிருபாகரன் 17ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகத்தின் சார்பில் டபிள்யு. சுகிர்தன், எஸ்.குகன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் என்.றொசான் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

139 ஓட்டங்கள் என்ற இலக்குடன் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 13 ஓவர்களில் 2விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து உரிய இலக்கை அடைந்து வெற்றியீட்டியது.

அணியின் சார்பில் வி.சங்கர் 35 ஓட்டங்களையும் கே.செல்வராசா 34 ஓட்டங்களையும் எஸ்.காந்தகுமார் ஆட்டமிழக்காமல் 31ஓட்டங்களையும் பெற்றனர்.

அன்றையதினம் மாலை நடைபெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் சென்றல் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது. (10)

## அகதிகள் தினத்தையொட்டிய விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 22

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் அரியாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

சிறுவர்களுக்கான பலூன் உடைத்தல் போட்டி, சாக்கோட்டப் போட்டி, பெண்களுக்கான சங்கீதக் கதிரை மற்றும் கரபந்தாட்டப்போட்டி என்பன இந்த விழாவில் இடம்பெற்றன.

குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசிப்போர் இப்போட்டிகளில் கலந்துகொண்டனர். (-10-90)

## ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன்22

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியும் ஆவரங்கால இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இதில் 0:3 என்ற கணக்கில் இந்து இளைஞர் வி.க. அணி வெற்றியீட்டியது. (10-190)

## இன்றைய ஆட்டங்கள்

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு மற்றும் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி - பாடும்மீன் வி.க. எதிர் அளவெட்டி விநாயகர் வி.க.

மாலை 4.30 மணி - சென். றொக்ஸ வி.க. எதிர் சென். மேரிஸ் வி.க.(10-190)

# விளையாட்டு



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட உதைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணியைப் படத்தில் காணலாம். (10-190)

## வேலை ஆள்கள் தேவை

சோடாப் பெட்டிகள் ஏற்றி, இறக்க
வேலை ஆள்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
*31, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(33343)(42-11-18-26)


## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்**
**பணிமனை யாழ்ப்பாணம்**

## ஏல விற்பனை

பின்வரும் பொருள்கள் 30.06.2004 ஆம் திகதி காலை 10மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வுள்ளது. கேள்விக்காரர் ரூபா 50/= செலுத்தி (மீளளிக் கப்படாதது) 29.06.2004 ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு முன்பதாக இவ்வலுவலகத்தில் தமது பெயரைப் பதிவு செய்தல் வேண்டும். கேள்வியில் தெரிவுசெய்யப்படுபவர் அன்றைய தினமே முழுப் பணத்தையும் செலுத்திப் பொருள்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தல் வேண்டும். அலுவலக நேரத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்.

1. வெற்றுப் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் (05 லீற்றர்)
2. வெற்று திரிபோஷா கடதாசிப் பைகள்
3. வெற்று திரிபோஷா உரப்பைகள் (சிறியன)
4. றெஜிபோம் (வெற்று) பெட்டிகள்
5. பாவித்த வாகன ரயர், ரியூப் வகைகள்
6. கழிக்கப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள், மின்கலங்கள்

ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம்:
**மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை**
(முன்னைய கட்டடம்)
**கற்பகப்பிள்ளையார் கோயிலடி ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் - யாழ்ப்பாணம்.

(சி-35720) (26-11-18)

ஓம்
சாயிராம்


## உள்ளப்பூரிப்புடன்
## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்ந்த சிந்தனையும் - வாடிக்கையாளர்
உயர்ச்சியின் முன்னோடி வழிகாட்டியுமான

திருவாளர்

**துரைசிங்கம் ரகு** அவர்கள்

(ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர்)



தற்பொழுது உதவிப் பிராந்திய முகாமையாளராகப்
பதவியேற்றுள்ளதையிட்டுப் பாராட்டிப்
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
அத்துடன், அவர்கள் இன்னமும் மென்மேலும்
பல சிறப்புகள் பெற்று உயர்வடைய இறைவனின்
ஆசிகள் என்றென்றும் கிடைக்கவேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

மில்லேனியம் றெஸ்ரோரன்ற்,
மில்லேனியம் கெஸ்ட் ஹவுஸ்,
உரிமையாளரும் சக ஊழியர்களும்.

76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.


(33252)(11-18-26)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

## அமரர்
## வைத்திய கலாநிதி க.ஜோர்ஜ்

**(D.A.M., R.I.M.P., J.P.)**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1930.04.06 | 2000.06.22 |



*"இறைவா என்னைக் காத்தருளும்*
*உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன் (தி.பா. 16:1)*

பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகை அடைந்து புகழ்
மேவுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்!
நீங்காத நினைவுகளால் நீர் மல்கும் விழிகளுடன்
தாங்காத மனைவி, மக்கள், உற்றார், உலகோர்
ஏங்காத நாளில்லை ஏன் மறைந்தீர் எம்மைவிட்டு?
நீங்காத நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்
ஆண்டாண்டு போனாலும் ஆர் மறப்பார் அரியதொண்டை!
மாண்டாருள் மாணிக்கமே! மகிமையெல்லாம் சேர்த்து வைத்து!
தூண்டாத மணிவிளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவரே!
இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்
குறையின்றி வாழ்வதற்காகக் கோயிலெல்லாம் கும்பிடுவோம்.

இன்று (22-06-2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவாற்றாமையால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

(33344)(24-11-18-26)

# பயன்படுத்துவோரை வஞ்சிக்காத இஞ்சி...

எமது மக்கள் தமது வீட்டுத்தோட்டங்களிலும், வீட்டு முற்றங்களில் சாடிகளிலும் மருத்துவ குணங்கொண்ட ஒரு சில பயிர்வகைகள் மற்றும் மூலிகை வகைகளைப் பயிரிட்டு வருகின்றனர்.

இம்மூலிகைப் பயிர்கள் மூலமும் அவற்றின் சாறுகளைக் கொண்டும் சிறுசிறு நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளும் திறமையையும் எமது மக்கள் பெற்றுள்ளனர். அத்தகைய மூலிகைப் பயிர்களுள் ஒன்றான இஞ்சியைப் பற்றி நாம் இங்கு பார்ப்போம்.



இஞ்சி ஒரு மூலிகைப் பயிர் மாத்திரமல்ல. அன்றாடப் பாவனைப் பொருளாகவும் உணவுக்குச் சுவையூட்டும் பொருளாகவும் இனிப்புப் பண்டங்களைத் தயார் செய்வதற்கும் மற்றும் பானங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆயுள்வேதம் மற்றும் பாரம்பரிய சுதேச வைத்தியம் தொடர்பான மருந்துகளைத் தயார்செய்வதற்கும் ஒருசில மேல்நாட்டு மருந்துவகைகளைத் தயாரிப்பதற்கும் ஆண்டுதோறும் பெருமளவில் இஞ்சி தேவைபடுகிறது. இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பிருந்தே இஞ்சிச்சோடா என அழைக்கப்படும் Ginger Beer தயாரிப்பதற்கும் இஞ்சி அல்வா தயாரிப்பதற்கும் இது பயன்படுத்தப்பட்டுவருகிறது.

எமது முன்னோர் காலத்தில் வீடுகளில் ஏனோதானோ என்று பெரிதாக அக்கறை செலுத்தாது சிறு அளவில் பயிரிடப்பட்டு வந்த இஞ்சி இன்றைய வர்த்தக உலகில் பெறுமதிமிக்க வர்த்தகப் பயிராக மாறியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய சிறுபயிரைச் செய்கை பண்ணுவதற்குச் சாதகமான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. மிகச்சிறிய வீட்டுத்தோட்டத்தில் அல்லது மிகச்சிறிய நிலப்பரப்பில் இதைப் பயிர்செய்யமுடியும். வேறு பயிர் வகைகளின் இடையில் ஊடுபயிராகவும் செய்யலாம். மிகக்குறைந்த செலவில் இதைப் பராமரிக்கலாம். நல்ல சந்தைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ளலாம். ஓர் அங்குல நிலத்தைக் கூட வீணாக்காது செய்கை பண்ணுவதற்கு இது மிகப் பொருத்தமான பயிராகும். நிலத்தின் மேல்மட்டத்தில் நிழலான இடத்தில் இப்பயிர் நன்கு வளரக்கூடியது. சிபார்சு செய்யப்பட்ட அளவில் காபன் பசளை பயன்படுத்தப்படுமானால் இஞ்சிப் பயிருக்கு இரசாயன உரங்கள் தேவைப்படாது இஞ்சி பயிரிடுவோருக்கு இது சாதகமான வாய்ப்பாகும்.

உக்கிய தென்னம் பொச்சுக்கள், வைக்கோல்,இலை, குழைகளைக் கலந்து காபன் பசளையைத் தயாரிக்கலாம்.

நடுகை செய்யப்படுவதற்கு முன் 3x10 அடிகொண்ட நடுகைத் தரைக்கு 100 கிராம் யூரியா, 150 கிராம் பொஸ்பேற், 200 கிராம் மியூரியேற்றற் ஒப் பொட்டாஸ் என்பவற்றையிட்டு ஒன்றுமுதல் இருவாரங்களுக்குள் இஞ்சித்துண்டங்கள் நடப்படல் வேண்டும். முன்னர் குறிப்பிட்டுள்ளதற்கமைய காபன் பசளைகள் இடப்படுமாயின் இந்த இரசாயன உரங்கள் தேவையில்லை.

**தொகுப்பு: சரா**

புல்வகைகள் மற்றும் ஏனைய களைகள் அடிக்கடி களையப்பட்டு நடுகைத்தரை நன்கு பாதுகாக்கப்படல் வேண்டும்.

மீண்டும் உரப்பிரயோகம் குறிப்பிடப்படும் முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

நட்டு ஒரு மாதத்தின் பின் பாத்திக்கு 250 கிராம் யூரியாவை மாலை வேளைகளில் இட்டு மண்ணோடு நன்கு சேர்த்தல்வேண்டும். பயிர்களின் இடையே காபன் பசளை அல்லது கிழுவை இலைகள் சொரியலாக இடப்படல்வேண்டும்.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பயிரிடப்பட்டு இம்முறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்போமானால் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை செய்யப்படும்போது 3x10 அடி கொண்ட தரையிலிருந்து சுமார் 25 கிலோ நிறைகொண்ட இஞ்சிக்கிழங்குகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வெற்றிலைக்குப் பயன்படுத்தும் சுண்ணாம்புக் கலவையில் இட்டு நன்கு வெயிலில் உலர்த்தியபின் இஞ்சியைப் பாதுகாப்பாகச் சேமித்துவைக்க முடியுமென்பது எமது விவசாயிகளின் பாரம்பரிய முறையாகும். ★





# மருத்துவ குணங்கள் மிகுந்த சாம்பல்பூசனி

சாம்பல்பூசனி எமது நாட்டின் வரண்ட வலயப் பிரதேசங்களில் வரட்சியான காலநிலைகளில் மிக நன்றாக வளரக்கூடிய ஒரு மரக்கறிப் பயிராகும்.

பெரும்பாலும் சேனைப் பயிர்ச் செய்கையாக இது பயிர்செய்யப்படுகிறது. ஈரலிப்பான தரையைத் துப்புரவுசெய்து தீயிட்டுக் கொளுத்திப் பண்படுத்திய பின்னர் அத்தரையில் நன்றாகக் காயவைத்த தரமான பூசனி விதைகளைப் பயிர் செய்வதன் மூலம நல்ல பயனைப்பெறலாம்.

நன்றாகப் பரந்து விரிந்த கிளைகளைக் கொண்டுள்ள மரங்களில் அல்லது தடிகளினால் கட்டப்பட்ட பரண்களில் இக்கொடிகளைப் படரவிட வேண்டும். கொடிகள் இவ்வாறு நன்றாகப் படர்வதற்கு ஆதாரங்கள் கிடைத்த பின்னர் அவை பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். நன்கு செழிப்பாக வளர்ந்த ஒரு பூசனிக்கொடியிலிருந்து 5 முதல் 10 காய்கள் வரை பெற்றுக்கொள்ளமுடியும். இக்காய்களை வைக்கோல் அல்லது காய்ந்த சருகுகளைக்கொண்டு மூடிப் பாதுகாத்துவரின் பூச்சிகளின் தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும.

இது ஒரு மரக்கறியாக மட்டுமல்லாது மருத்துவத் தேவைக்குகந்த பொருளாகவும் இருப்பதால் அதற்குச் சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. சாம்பல பூசனியில் நீர்தான் அதிகமாக உள்ளதென்றும் எவ்வித சுவையும் இருப்பதில்லை என்றும் எமத் மக்கள் இதனைப் பெரிதாக உணவில் சேர்த்துக்கொள்வதில்லை.



ஆனால், ஆயுர்வேத மருத்துவத்தைப் பொறுத்தவரையில் கொடிகளில் காய்க்கும் காய் வகைகளில் சாம்பல் பூசனியே மிகச் சிறந்த மரக்கறியாகக் கருதப்படுகிறது.

இதில் அடங்கியுள்ள குணங்களைக் கருத்திற் கொள்ளும்போது உண்மையில் இதை ஒரு சிறந்த மரக்கறி என்றே கூறவேண்டியுள்ளது. இச்சாம்பல் பூசனி, சிறுநீர் பாதிப்பு மற்றும் சிறுநீர் குறைவாக வெளியேறுதல் போன்றவற்றை நிவர்த்தி செய்கிறது. 'பிரமேகம்' என்னும் நோயைக் குணமாக்குகிறது. சிறுநீர் வெளியேறுவதில் ஏற்படும் சிரமத்தை நிவர்த்திசெய்கிறது. அதிக தாகத்தை நீக்குகிறது. மெலிந்த தேகத்தைச் சதைப்பிடிப்பாக மாற்றுகிறது. காம சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. உணவில் விருப்பத்தை ஏற்படுத்தி பித்தத்தைப் போக்குகிறது. மலச்சிக்கலையும் நீக்கவல்லது.

இதில் காணப்படும் மேலுமொரு விசேட குணம் யாதெனில் உண்விலடங்கியுள்ள நச்சுத் தன்மையை நீக்குவதாகும். நாம் உட்கொள்ளும் மருந்து வகைகளில் உள்ள நச்சுத் தன்மை மற்றும் நாளாந்தம் நாம் உண்ணும் இறைச்சி, மீன், தக்காளி போன்ற உணவுகளிலடங்கியுள்ள அமிலத்தன்மை ஆகியவற்றை நீக்கி எமது உடலுக்கு ஆறுதல் அளிக்கும் குணத்தையும் அது கொண்டுள்ளது.

**தொகுப்பு: ராதிகா**

நன்றாக முற்றாத இளம் சாம்பல் பூசனியை விடவும் நன்கு முற்றிய பூசனிக்காயில் அதிகளவில் மருத்துவ குணம் உள்ளது.

பூசனிக்காயைப் போன்று இதை முரட்டுத்தனமாகக் கையாளக் கூடாது. இதை எடுத்துச்செல்லும்போது பக்குவமாகப் பொதிசெய்தே கொண்டு செல்ல வேண்டும். சிறு கீறல் ஏற்பட்டாலும் காய் சேதமடைந்து அது விரைவில் பழுதடைந்துவிடும். அத்தோடு அதிக மழை காரணமாகவும் அழிந்து போகக்கூடும்.

மனநோயைக் குணமாக்கவல்லது எனவும், மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், எமது நாட்டில் கிரியைகளுக்கும் சாம்பல் பூசனிக்காய பயன்படுத்தப்படுகிறது. ❒

# பிக்குவைத் தாக்கியதை நிரூபித்தால் உயிரை விடுவாராம் அரச எம்.பி.!

கொழும்பு,ஜூன்22

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண. கொலன்னாவே சுமங்கல தேரரைத் தாம் தாக்கினார் என்பதை அவர் நிரூபிப்பாரானால் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தமது பதவியிலிருந்து விலகிக்கொள்வது மட்டுமல்ல தன்னைச் சாகடித்துக்கொள்ளவும் தயங்கப்போவதில்லை என்று கூறியுள்ளார்.

கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட களேபரத்தின்போது ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுபபினர் வண. கொலன்னாவே சுமங்கல தேரரை நாடாளுமன்ற உறுப்பினரான மேர்வின் சில்வா தாக்கியதாகக் குற்றஞ்சாட்டபபட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை மேர்வின் சில்வா மறுத்திருப்பதுடன் குறித்த சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பே இல்லையென்றும் மறுத்துள்ளார்.

அந்தச் சம்பவத்தில் நான் தொடர்பு கொண்டிருந்தேன் என்று சுமங்கல தேரர் நேர்மையுடன் தனது விரலை நீட்டிக் கூறுவாரானால் நாடாளுமன்றத்தில் எனது பதவியைத் துறப்பது மட்டுமல்ல எனது வாழ்க்கைக்கே பிரியாவிடை கூறவும் தயாராக இருக்கிறேன் என்று மேர்வின் சில்வா கூறியிருக்கிறார்.

பத்திரிகையொன்றுக்கு தொலைபேசியில் பேட்டியளித்துள்ள மேர்வின் சில்வா, 'மேர்வின் சில்வா பொய் கூறமாட்டான், இதில் இரண்டு வார்த்தைக்கு இடமில்லை. வியட்நாமில் புத்தபிக்கு ஒருவர் தனக்குத்தானே தீமூட்டிக்கொண்டது போல நானும் இந்த வாழ்வை முடித்துக்கொண்டு விடுவேன்' என்று கூறியுள்ளார்.

நான் ஏன் பிக்குவைத் தாக்க வேண்டும். அவர் தமது ஆசனத்தில் இருந்ததை நான் பார்த்திருக்கலாம். ஆனால், அந்த அமளியில் அவர் எங்கு நின்றார் என்பதே எனக்குத் தெரியாது என்றார் மேர்வின் சில்வா. (ப-8)

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 2ஆம் திகதி காலை 10 மணிக்குத் தலைவர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் வித்தியாலய நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-6)

18 வயதுக்கு உட்பட்ட

# வலுவிழந்தோர் புனர்வாழ்வு; குடாநாட்டில் விசேட திட்டம்

தென்மராட்சி,ஜூன்22

யாழ். மாவட்டத்தில் உள்ள 18 வயதுக்குட்பட்ட வலுவிழந்தோருக்கான புனர்வாழ்வு வேலைத் திட்டங்கள் யாழ். செயலகத்தினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சமுதாய மட்டத்திலான விசேட தேவை உடையவர்களுக்கான புனருத்தாரண வேலைத்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர்கள், தொண்டர்களுக்கான கலந்துரையாடல் நாளைய மறுதினம வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறுமென மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (4-117)

# கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் அதாவுல்லா மேற்கொள்கிறார்

கொழும்பு,ஜூலை22

செயலிழந்துள்ள கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பது பற்றி கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா கந்தளாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

அண்மையில் கந்தளாய்க்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தபோதே அமைச்சர் இதுபற்றிக் கலந்துரையாடியுள்ளார்.

1962ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி தொழிற்சாலை இனப் பிரச்சினை காரணமாக 1993ஆம் ஆண்டில் மூடப்பட்டது. இங்குள்ள கட்டடங்களுடன் சேர்த்து இத்தொழிற்சாலை சுமார் 40 கோடி ரூபா பெறுமதியுடையது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இத்தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கும் வகையில் அமைச்சரின் நெறிப்படுத்தலில் கந்தளாய்ப் பிரதேச செயலர் எஸ்.டி.பியதாச அறிக்கையைத் தயாரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-ரி)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

27/17, புங்கங்குளம்வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டை மாடியுடன் சமுர்த்தி வங்கிக்கு முன் ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாகனத் தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (35650)

இலக்கம் 514, 515, 516, 517 யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு முன்பக்கமாக 4 வீடு தொடர்மாடி சகல வசதிகளுடனும் கூடியது விற்பனைக்கு உண்டு. லொட்ஜ் நடத்துவதற்கு உகந்தது. தொடர்பு: N.கனகேஸ்வரி, T.P.: 077 6540092. (33154)

600 குவாட்டா லான்ட்மாஸ்டர் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.ரூபன், மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை. T.P.:0777 770914. (33310)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 23.06.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.No: 3529 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33305)

கொழும்பு-05 ஹவ்லொக் வீதியில் திம்பிரிக்கசாய சந்திக்கு அருகில் மக்கள் வங்கிக்கு அருகிலும் செலான்/சம்பத் வங்கிகளுக்கு எதிர்ப்புறமாகவும் கீழே கடையுடன் கூடிய மேல்மாடிக் கட்டடம் உடன் விற்பனைக்கு. (No:81, Havelock Road, Colombo-05) தொடர்புகளுக்கு: 0777 368162. (சி-35727)

## கணனிகள் கையளிப்பு

குருநகர், ஜுன்22

உலக வங்கியின் நிதி உதவியுடன் நீர்ப் திட்டத்தின் கீழ் யாழ்பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குப் புதிதாக ஐந்து கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. (10-51)

# தொடர்பு சாதனங்கள் மூலம் மாணவர்கள் திசைமாறுவதைத் தடுக்கக் கலைத்திட்டம்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தகவல்

தொடர்புசாதனம் மூலம் மாணவர்கள் திசைமாறிச் செல்லாமலிருப்பதற்காகக் கலைத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலையின் வருடாந்த நிகழ்வுகளில் பரிசுத்தினம் முக்கியமானது. மாணவர்களது சாதனைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் நாள் இதுவாகும். பாடசாலைகளின் செயற்பாடுகள் உலக மயமாக்கலுக்கு நின்று பிடிக்கவேண்டும். தற்போது எமது நாட்டின் கல்வியில் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலம், கணனிப் பாடபோதனைகள் பாடவிதானத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடங்களிலும் புதிய அலகுகளும் புகுத்தப்பட்டு கல்விப் பாடத்திட்டம் பரந்ததாக ஆக்கப்பட்டுள்ளது.

தொடர்புசாதனங்கள் மூலம் மாணவர்கள் திசைமாறிச் செல்லாமலிருப்பதற்காக கலைத்திட்டம் புகுத்தப்பட்டுள்ளது. முதலாம்வகுப்பு மாணவர்களுக்கு தொடர்பாடல் ஆங்கிலமும் ஆண்டு 10 இல் பயிலும் மாணவர்களுக்கு கணனி விருப்பத்துக்குரிய பாடமாகவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாணவர்கள் ஒவவொருவரிடமும் நிறைந்த ஆற்றல் உள்ளது. அதறகு நல்ல சந்தர்ப்பம் வழங்கினால் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். ஆசிரியர்களின் முயற்சிக்கு பெற்றோர்களும் மாணவர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். நகரப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் இடப்பற்றாக் குறையால் அவதியுறுகின்றன. வகுப்புக்களை நடத்தக்கூட சில பாடசாலைகளில் இடவசதி போதாதுள்ளது. இதனால், மாடிக்கட்டடங்களை அமைகக வேண்டிய தேவையுள்ளது.

பாடசாலைகளில் கணனிக்கல்வி உ்ள்ளபோதிலும் மாணவர்களின் தேவைக்கேற்ற அளவிற்கு இவற்றைப் பெறமுடிவதில்லை. பாடசாலைகளில் பாடத்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு சனிக்கிழமைகளிலும் வகுப்புக்களை நடத்தவேண்டியுள்ளது. கல்வி மேம்பாட்டுக்கு எல்லைகிடையாது. அடைவுகளுக்கு எல்லை கிடையாது. தற்போது சாதாரண சித்திபெறும் மாணவன் தமது திறமையான செயற்பாடு மூலம் அதியுயர் சித்தியைப் பெறும்நிலைக்குத் தன்னை உயர்த்திக்கொள்ளவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா தமதுரையில் தெரிவித்ததாவது:-

ஒரு பாடசாலையின் உயர்வும் தாழ்வும் பெற்றோர்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்றன. இவை பாடசாலையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கு அப்பாடசாலையில் கற்கும் சகல மாணவர்களும் வருகை தரவேண்டும். பரிசுகளைப் பெறத்தகுதி பெறாத நிலையிலுள்ள மாணவர்கள் பரிசுகளைப் பெறும சக மாணவர்களைப் பார்த்துத் தம்மைக் கல்வியில் வளர்த்துகொள்ள இது வாய்ப்பாக அமையும் - என்றார்.

அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதனால் பாடசாலையில் இடப்பிரச்சினை பாரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. இதனால் புனித யாகப்பர் ஆலயத்திற்குச் சொந்தமான யாகப்பர் மண்டபத்தையும் பாலர் பாடசாலையையும் பயன்படுத்தி ஐந்து வகுப்புக்களை நடத்துவதுடன சங்கீதம், நடனம் போன்ற அழகியற் பாடங்களைக் கோயில் முகப்புப் பகுதியிலும் நடத்தி வருகின்றமை வருத்தத்திற்குரியதாகும். எனவே, எமது இடநெருககடியை நீக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டு பூர்த்திசெய்யப்படாத நிலையில் உள்ள மூன்று மாடிக்கட்டடத்தினை யாழ்.கல்விவலயம் பூர்த்திசெய்து தந்தால் இடநெருக்கடி தீரும் - என்றார். (எ-51)


## வரதன் லேனேர்ஸ்

## VARATHAN LEARNERS

**Driving Licence**
**Learning School - "A" Grade**
**Govt. Approved - L**
**No.D.S.365**





ஒரு வருடமாக வன்னி மாவட்டத்தில் சிறந்த சாரதிகளை உருவாக்கிய வரதன் சாரதி பயிற்சிப் பாடசாலை தனது ஓராண்டு நிறைவில் ஜூன் 21- 28 வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நல்லொழுக்க சாரதி வாரத்தினை முன்னிட்டு ஜூன் 21 முதல் ஜூலை 21 வரை $C_1$, A லைசென்ஸ் பெறுவதற்கு, பழகுவதற்குச் சேரும் அனைவருக்கும் **10%** கட்டணச் சலுகை வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ யாழ். மாவட்டத்திலேயே பயிற்சிகள் வழங்கி ஒரு மாதத்தில் லைசென்ஸ் பெற ஒழுங்குசெய்யப்படும்.
★ எமது நிறுவனம் அரச அங்கீகாரம் பெற்ற (பதிவு எண் D.S.365) A Grade பயிற்சிப் பாடசாலையாகும்.
★ பெண்கள், உத்தியோகத்தர் நலன்கருதி பிரத்தியேக நேரங்களில் பயிற்சி வழங்கப்படும்.

முகவரி: நவீன சந்தை, மேல்மாடி
T.P.:0777-110868, 0712-373294.

**எமது கிளை நிறுவனங்கள்**

1. 133, K.K.S. வீதி-சத்திரச் சந்தி அருகில், யாழ்ப்பாணம். T.P.:077-6403253
2. டிலக்ஸ் கொமினிக்கேசன் அன் எலக்ரிக்கல் பிரதான வீதி, சுன்னாகம்.
3. அட்ஷயா கொமினிக்கேசன் நவக்கிரி, புத்தூர் - 060 2213150
4. சபா கொமினிக்கேசன் பிரதான வீதி, அச்சுவேலி - 070 212359.
5. மனோ கொமினிக்கேசன் கொடிகாமம் வீதி, நெல்லியடி - 021 226 3072
6. கஜமுகன் கொமினிக்கேசன் 1 ஆம் கட்டை, யாழ். வீதி, பருத்தித்துறை - 021 226 3228
7. 136, பிரதான வீதி (தபால்நிலையம் அருகில்) சுழிபுரம் 0777 110818 0776403254
8. விதுஷன் கொமினிக்கேசன் மானிப்பாய் - 021 459 1638

நல்லொழுக்க, பண்பான சாரதியாகுவதற்கு
இன்றே நாடுங்கள்

**வரதன் லேனேர்ஸ்**

(33346)(34-14-19)



## குழந்தைகளுக்கு அன்பளிப்பதற்கு

# சிறந்த பரிசு




# ரண் கெகுளு

## பரிசு வவுச்சர்

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும், "ரண் கெகுளு பரிசு வவுச்சர்" எமது குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் ஒரு முதலீடாகும்.

"ரண் கெகுளு பரிசு வவுச்சர்" எமது குழந்தைகளின் வாழ்வின் விசேட தினங்களில் அன்பளிப்பாக வழங்கக் கூடிய சிறந்த பரிசு.

- ரூபா.100/=, ரூபா.200/= ரூபா.500/= ரூபா.1000/= ஆகிய பெறுமதிகளில் "ரண் கெகுளு பரிசு வவுச்சர்களை" எல்லா இலங்கை வங்கி கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- "ரண் கெகுளு பரிசு வவுச்சர்" பெற்றவர்கள் தாம் விரும்பிய இலங்கை வங்கி கிளைகளில் குறிப்பிட்ட பெறுமதிக்கு ரண் கெகுளு கணக்கை ஆரம்பிக்கலாம் அல்லது ஏற்கனவே "ரண் கெகுளு" கணக்கு உள்ளவர்கள் பணத்தை அந்தக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.

Twin Advertising

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி